වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயற்திறன் அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2025

Head No: 265





இணைப்பு : I

உள்ளடக்கம்

1. அத்தியாயம் 01- நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம் 01
1.2. நிறுவனத்தின் தூரநோக்கு பணிக்கூற்று. குறிக்கோள்கள் 04
1.3. பிரதான செயற்பாடுகள் 05
1.4. நிறுவன விளக்கப்படம் 07
1.5. மாவட்டச் செயலகத்தின் பிரதேச செயலகங்கள் 07
1.6. நிதியங்கள் 08
1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் 08

2. அத்தியாயம் 02- முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள். 09

3. அத்தியாயம் 03- 2025 வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

3.1. நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று 15
3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று 16
3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று 17
3.4. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 18
3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை 23
3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 24
3.7. நி.தி குறிப்பு 208 பிரகாரம் மாவட்டச் செயலக செலவினத்திற்கான ஒதுக்கீடு 25
3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை. 32
3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 33

4. அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்.. 40

5. அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 41

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்...... 51

6. அத்தியாயம் 06- மனித வள விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம் 54

6.2. பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது... 54

6.3. மனித வள அபிவிருத்தி.. 55

7. அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை 59

1. அத்தியாயம் 01- நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்

மாவட்டத்தின் அமைவிடம்

மன்னார் மாவட்டமானது இலங்கையின் வடமேற்கு திசையில் அமைந்துள்ளது. இம் மாவட்டமானது, இலங்கைத் தீவின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது. இம்மாவட்டமானது கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களினால் சூழப்பட்டுள்ளது. இது சிறு கரையோரப் பாதை மூலம் நாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது பரப்பளவானது 1,996 சதுர கிலோ மீட்டராகும். ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன: மன்னார் நகரம், நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்கு ஆகும்.

.



பிரதேச செயலக வாரியாகப் பரப்பளவு

பிரதேச செயலகங்கள்	பரப்பளவு	
	சதுர Km	வீதம்
மன்னார் நகரம்	212	10.62
நானாட்டான்	148	7.41
முசலி	475	23.80
மாந்தை மேற்கு	608	30.46
மடு	553	27.71
மொத்தம்	**1,996**	**100.00**

மாவட்டத்தின் வாழ்வாதாரம், மற்றும் பொருளாதார முறை

- **நெற்பயிர்ச்செய்கை**
- **மீன்பிடி**
- **பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை**

மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பல்.

- **பிரதேச செயலகவாரியாகச் சனத்தொகை**

பிரதேச செயலகங்கள்	மொத்த சனத்தொகை	மொத்த குடும்பங்கள்
மன்னார் நகரம்	70,058	20,536
நானாட்டான்	22,755	7,586
முசலி	29,040	8,649
மாந்தை மேற்கு	26,592	8,112
மடு	14,367	4,600
மொத்தம்	**162,812**	**49,483**

- **இன ரீதியாகச் சனத்தொகை**

இனம்	சனத்தொகை
தமிழர்	96,534
இஸ்லாமியர்	65,335
சிங்களவர்	943
மொத்தம்	**162,812**

மாவட்டத்தின் காலநிலை

மன்னார் மாவட்டமானது ஒரு உலர் வலயப் பிரதேசமாகவும், கூடிய வெப்பநிலையை உடைய மாவட்டமாகவும், குறைந்த அளவு மழைவீழ்ச்சி உடைய மாவட்டமாகவும் காணப்படுகின்றது. மாவட்டத்தின் வெப்பநிலை எல்லையானது $28^{o}c$-$33^{o}c$ ஆகவும், சராசரி மழைவீழ்ச்சியானது 74mm-104mm ஆகவும் காணப்படுகின்றது.

மாவட்டத்தின் அடிப்படைப் புள்ளி விபரங்கள்

- ✓ மாவட்டத்தின் பெயர் : மன்னார்
- ✓ மாகாணத்தின் பெயர் : வட மாகாணம்
- ✓ மொத்த நிலப்பரப்பு : 1,996 Sq.km
- ✓ பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை : 05
- ✓ கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை : 153
- ✓ கிராமங்களின் எண்ணிக்கை : 616
- ✓ வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை : 98
- ✓ மாநகர சபைகளின் எண்ணிக்கை : 00
- ✓ நகர சபைகளின் எண்ணிக்கை : 01
- ✓ பிரதேச சபைகளின் எண்ணிக்கை : 04
- ✓ சுற்றுலா விடுதி, மற்றும் அரச விடுதி : 44
- ✓ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை : 06
- ✓ மாகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை : 06
- ✓ உள்ளுராட்சி அதிகார சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை : 92
- ✓ பதியப்பட்ட வாக்காளர்கள் : 91,204
- ✓ சனத்தொகை : 162,812

1.2. நிறுவனத்தின் துாரநோக்கு பணிக்கூற்று. குறிக்கோள்கள்

துாரநோக்கு

நிலையான அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதன் மூலம் மன்னார் மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

பணிக்கூற்று

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளை இணைத்து கண்காணிப்பதன் மூலம் அந்நிறுவனங்களின் செயலாற்றுகையை முன்னேற்றுவதுடன் அரசாங்கத்தினதும் பொதுமக்களினதும் எதிர்பார்ப்பிற்கமைய குறைந்த செலவில் தரமான வினைத்திறன்மிக்க சேவையினை வழங்குதல்.

குறிக்கோள்

மாவட்டச் செயலகத்தின் குறிக்கோளானது அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் வேறுபட்ட சட்டங்களின் மூலம் கையளிப்புச் செய்யப்பட்ட தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தலும், சமூகப்பொருளாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை உருவாக்குதலும், அவற்றை கண்காணித்து நெறிப்படுத்துவதுடன் அவற்றின் நன்மைகளை சம்மந்தப்பட்டோர் அனுபவிப்பதை உத்தரவாதப்படுத்துதல்.

1.3. பிரதான செயற்பாடுகள்

- மாவட்ட மற்றும் பிரதேச மட்டச் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் உத்தியோகத்தர்களின் அனைத்துக் கடமைகளும் அது தொடர்பான நடவடிக்கைகள். (சுயவிபரக் கோவை, விடுமுறைகள், சம்பளம், மேலதிக நேரக் கொடுப்பனவு, விடுமுறை நாட் கொடுப்பனவு, ஊழியர்களின் புகையிரத ஆணைச்சீட்டு, கடன் மற்றும் ஏனைய நடவடிக்கைகள்)

பின்வரும் சேவைகளை மக்களுக்கு வழங்குவது அல்லது ஏனைய நிறுவனங்கள் மூலம் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இணைப்பினை ஏற்படுத்துதல்.

- தேசிய அடையாள அட்டை, வியாபாரப் பதிவுச்சான்றிதழ், பிறப்பு இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ், மோட்டார் போக்குவரத்து இறைவரி அனுமதிப்பத்திரம்.
- தேருநர் இடாப்பு பராமரித்தல் மற்றும் வழங்குதல்.
- காணிக்கான உறுதிகள் மற்றும் காணி பிணக்குகளை தீர்த்து வைத்தல்.
- வயோதிபர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குதல்.
- கர்ப்பிணித்தாய்மார்கள் மற்றும் முன்பள்ளி மாணவர்களின் போசாக்கு மட்டத்தினை மேம்படுத்துவதற்கான பங்களிப்பினை வழங்கல்.
- உளவியல் ரீதியாகவும், மனோ ரீதியாகவும் பாதிப்படைந்த மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் உடல் நலத்திற்கும் ஆலோசனை வழங்குதல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- பெண்களை தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்குவிப்புக்களை வழங்குதல்

நிதி நடவடிக்கைகள் மற்றும் பரிமாற்றல் நடைமுறைகள் மூலம் எழுச்சிக்குள்ளாக்கி இலக்குகளை அடையும் மேலதிகமான செயல், பணிகள்

- வினைத்திறமையுடன் (அனுமதியுடன் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம்) செலவினங்களை மேற்கொள்ளலும் கணக்கு வைத்தலும்.
- ஊழியர்களுக்கான எல்லாவித கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்.
- கச்சேரியின் நானாவித வைப்புகளிலிருந்து நிதிப்பகிர்வு மற்றும் உரிய கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- மாதாந்த, வருடாந்த கணக்குகள் மற்றும் ஏனைய கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய திணைக்களங்களுக்கும், பொது திறைசேரிக்கும் அனுப்பி வைத்தல்.
- மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வழங்கல், சேவைகள் ஆகியவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
- வருடத்திற்கான கொள்ளல் திட்டங்களை தயாரித்தல், வருடாந்த சுற்றாய்வுகளை (பொருட்கணக்கெடுப்பு) மேற்கொள்ளுதல்.

கலை கலாசார பண்புகளையும், விழுமியங்களையும் அதன் உயர் மதிப்புகளையும் ஊக்குவிக்கும் அமைப்பு நடவடிக்கைகள்

- மாவட்ட கலாசார, விளையாட்டு நிகழ்வுகள், தேசிய மட்ட, மாவட்ட மட்ட, விழாக் கொண்டாட்டங்களை நடாத்துதல்.

மாவட்ட வளங்களை பயன்படுத்தி வினைத்திறனுள்ள பயன்பாட்டுடன் திட்டங்களை வடிவமைத்தல்

- மாவட்ட திட்டமிடல் காணிப் பகிர்வு பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவு
- கைத்தொழில் துறை அபிவிருத்திப் பிரிவு
- மாவட்ட விவசாய பிரிவு

பொது மக்களை அனர்த்தத்திலிருந்து பாதுகாத்தல்

- இயற்கை அனர்த்தங்களிலிருந்து பொது மக்களை பாதுகாத்தல் (வெள்ளம், மண்சரிவு, வறட்சி) அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்புடன் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு ஆரம்ப வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

மாவட்டத்தின் அடிப்படை புள்ளி விபரங்களை சேகரித்தலும், பராமரித்தலும்

- மாவட்டத்தின் புள்ளிவிபரக்கிளையின் மூலம் புள்ளி விபர நிகழ்வு பூர்த்தி செய்யப்படுகின்றது.

பிரதேச மட்டத்திலான நிலையான அபிவிருத்திகள்

- வீதிகள், நீர்ப்பாசனம் மற்றும் மின்சார வசதிகள் தொடர்பான அபிவிருத்திகள்
- பன்முகப்படுத்தப்பட்ட பாதீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி மூலத்தின் மூலம் மாவட்டத்திற்கான அபிவிருத்திகளை மேற்கொள்ளும் பொருட்டான நிதி பங்கீடும், வினைத்திறன் மிக்க கண்காணிப்பும்.
- அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் மேற்பார்வை செய்தலும் (சமுர்த்தி)
- வீடமைப்புத்திட்டங்களுக்கான வசதிகளை ஒழுங்கு செய்து வழங்குதல்
- போரினால் பாதிப்படைந்த மக்களுக்கு நட்டஈடு வழங்குதல்
- வனவிலங்குகளால் பாதிப்படைந்த மக்களுக்கு நட்டஈடுகள் வழங்கல்.

1.4. நிறுவன விளக்கப்படம்



1.5. மாவட்டச் செயலகத்தின் பிரதேச செயலகங்கள்.

- மன்னார் நகரம்
- நானாட்டான்
- முசலி
- மாந்தை மேற்கு
- மடு

1.6. நிதியங்கள்

மாவட்டச் செயலகம் மன்னார், தலைப்பு இல – 265

செலவினக் குறியீடு	வருடாந்த வரவு செலவு ஏற்பாடு	மொத்தத் தேறிய ஒதுக்கீடு
மீண்டுவரும் செலவினம்		
1001 - சம்பளமும் கூலியும்	254,000,000	316,500,000
1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	8,300,000	10,000,000
1003 - ஏனைய கொடுப்பனவுகள்	186,000,000	154,700,000
1101 - உள்ளுர்	5,700,000	5,030,000
1201 - எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்	15,500,000	13,820,000
1202 - எரிபொருள்		
002- எரிபொருள் கொடுப்பனவு	5,700,000	4,600,000
009- குழும வாகன எரிபொருள் செலவு	11,100,000	6,950,000
010- ஏனைய எரிபொருள் செலவு	5,800,000	2,150,000
1203 - உணவும் சீருடைகளும்		
002- சீருடைகள்	2,164,000	2,104,000
1205 - ஏனையவை	2,936,000	2,936,000
1301 - வாகனங்கள்	17,800,000	17,800,000
1302 - பொறி, இயந்திரம், உபகரணம்	8,000,000	7,650,000
1303 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	11,500,000	11,200,000
1304 – மென்பொருள் பராமரிப்பு	2,000,000	420,000
1401 - போக்குவரத்து	1,750,000	1,300,000
1402 - தபால், தொலைத்தொடர்பு	8,000,000	5,850,000
1403 - மின்சாரமும் நீரும்	16,000,000	11,400,000
1404 - வாடகையும், உள்ளுராட்சி சபைகளுக்கான வரியும்	1,100,000	550,000
1405 – துப்புரவு மற்றும் சுத்திகரிப்பு சேவை	13,000,000	10,800,000
1407 – பாதுகாப்பு சேவை	7,500,000	10,950,000
1409 - ஏனையவை		
138- இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான சேவை ஒப்பந்தம்	3,800,000	2,300,000
139- வாகன காப்புறுதி	2,250,000	1,540,000
140- எதிரபாராத செலவினங்கள்	5,000,000	5,000,000
1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	1,100,000	450,000
மொத்தம்	**596,000,000**	**606,000,000**
மூலதனம் செலவினம்		
2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்		
048 – மாவட்ட செயலகம்	50,000,000	50,000,000
049 – பிரதேச செயலகம்	69,800,000	69,800,000
2002 - பொறி, இயந்திரம், உபகரணம்	6,000,000	6,000,000
2003 - வாகனங்கள்	16,200,000	16,200,000
2102 - தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்	20,000,000	20,000,000
2103 - பொறி, இயந்திரம், உபகரணம்	24,000,000	24,000,000
2401 - பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	3,000,000	3,000,000
2509 - ஏனையவை	-	115,000,000
மொத்தம்	**189,000,000**	**304,000,000**
மொத்த மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினம்	**785,000,000**	**910,000,000**

1.7. வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம்

- **இல்லை**

2. அத்தியாயம் 02- முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1. சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்.

மன்னார் மாவட்டம் இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ளது. தெற்கே புத்தளம், தென்கிழக்கே அநுராதபுரம், கிழக்கே வவுனியா, வடகிழக்கே முல்லைத்தீவு, வடக்கே கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களையும் மேற்கே நீண்ட கடற்பரப்பினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இம்மாவட்டம் 1,996 SQ-km பரப்பளவினை கொண்டுள்ளதுடன், சராசரியாக SQ-km க்கு தலா 82 மக்கள் பரம்பலையும் கொண்டுள்ளது. இற்றைப்படுத்தப்பட்ட அறிக்கையின் படி மன்னார் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 162,812 பேர் ஆக காணப்படுகின்றது. வன்னி தேர்தல் மாவட்டத்தின் அரசியல் பகுதியாக இம்மாவட்டம் காணப்படுகின்றது. மேலும் இம்மாவட்டம் 5 பிரதேச செயலங்களும் 153 கிராம சேவையாளர் பிரிவுகள் மற்றும் 616 கிராமங்களையும் கொண்டுள்ளது.

பிரதானமாக விவசாயத்தினை மேற்கொள்ளும் மாவட்டம் இதுவாகும். மேலும் பிற பயிர்கள் உற்பத்தி, கால்நடை வளர்ப்பு, காடாக்கல் (வனவியல்), கடற்தொழில் மற்றும் உள்ளூர் மீன்பிடி என்பவை பிரதான தொழிற் கூறுகள் ஆகும். இங்கு 31,631 விவசாய குடும்பங்கள் விவசாயம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

அண்மைய கணக்கெடுப்புகளின் படி அண்ணளவாக 7,315 பெண் தலைமைத்துவ குடும்பங்கள், 2,365 மாற்றுத்திறனாளிகள் இம்மாவட்டத்தில் உள்ளனர். மேலும் அவர்களுள் 2,250 பேர் அரசாங்கத்திலிருந்து மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்த உதவித் தொகைகளைப் பெறுகின்றனர்.

சாதனைகள்

எமது மாவட்ட செயலகமானது ஒரு செயற்பாட்டு கட்டமைப்பினை கொண்டுள்ளது. இது செயற்பாடுகள் மற்றும் பதவிகளுக்கு இடையிலான தொடர்பு மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. அதிகார பகிர்வு, பொறுப்புகள் மற்றும் அங்கீகாரம் என உப பிரிவுகளாக்கப்பட்டு குறிக்கப்பட்ட சேவைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பொருத்தமான இலக்குகளை அடைவதற்கான மிகவும் பொருத்தமான நிர்வாக கட்டமைப்பு கொண்ட அடிப்படையான சூழல் எமது மாவட்ட செயலகத்தில் காணப்படுகின்றது.

மாவட்டத்தின் அனைத்து மக்களையும் பாதுகாத்தல், அவர்களுடைய பாதுகாப்பான வாழ்க்கை, வாழ்வாதாரம் மற்றும் மருத்துவ உதவிகள் போன்றவற்றை பொறுப்புடன் வழங்குவதனை அரசு மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலம் மாவட்ட நிர்வாகம் செயற்படுத்தியுள்ளது. அவை பின்வருமாறு:

- நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ரூபா 82.28 மில்லியன் செலவில் வீடற்ற 51 குடும்பங்களுக்கு வீட்டுத்திட்டமும், மீள்குடியேற்றப்பட்ட 150 குடும்பங்களுக்கு இலவச மின்சார இணைப்பும் 124 குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டுத்திட்டத்தின் மூலம் ரூபா 18.38 பெறுமதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் செம்மந்தீவு பகுதியில் நெல் உலர்த்தும் தளம் ரூ. 5 மில்லியன் மதிப்பில் அமைக்கப்பட்டது.

- சுற்றாடல் அமைச்சின் கீழ் UNDP நிதி உதவியுடன் ரூ. 28.64 மில்லியன் மதிப்பில் வங்காலை கடல் தடுப்பு (Sea Breaker) திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

- டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் மூலம் மாவட்ட மற்றும் பிரதேச பிரஜாசக்தி பிரிவுகளை வலுப்படுத்த ரூ. 0.6 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

- பல துறைகளில் 85 மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் (DDP) ரூ. 115 மில்லியன் மதிப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- 2025 ஆம் ஆண்டில் மன்னார் மாவட்டத்தில் 37 அரசு சார்பற்ற நிறுவனங்கள் NGOs) செயல்பட்டன. இவை மனிதாபிமான உதவி, வாழ்வாதார மேம்பாடு மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் திறன் வளர்ச்சி போன்ற துறைகளில் ரூ. 622 மில்லியன் செலவில் திட்டங்களை செயல்படுத்தின.

- நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சு ரூ. 100 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 15 தேர்ந்தெடுக்கப்பட்ட வீதிகளை மறுசீரமைத்தது. இத்திட்டம் வட மாகாண வீதி அபிவிருத்தி துறையின் தொழில்நுட்ப ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

- போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், விளையாட்டு மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் ரூ. 200 மில்லியன் ஒதுக்கீட்டின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 14 முக்கிய வீதிகள் மறுசீரமைக்கப்பட்டது. இத்திட்டங்கள் முழுமையாக தரநிலைகளுக்கு ஏற்ப நிறைவேற்றப்பட்டன.

- பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் திணைக்களத்தினால், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 10,360 வீடுகளுக்கு வீடொன்றுக்கு ரூ.25,000.00 வீதம் மொத்தமாக ரூ.259 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும், 2,672 வீடுகளுக்கு வீடொன்றுக்கு ரூ.50,000.00 வீதம் மொத்தமாக ரூ.133.6 மில்லியன் வழங்கப்பட்டது. அத்துடன், கற்றல் உபகரணங்களை இழந்த 2,775 மாணவர்களுக்கு மாணவரொன்றுக்கு ரூ.15,000.00 வீதம் மொத்தமாக ரூ.41.625 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டது.

- “டித்வா” அனர்த்த நிலைமையின் போது பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்ட இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் திணைக்களத்தினால் ரூ.28.77 மில்லியன் செலவிடப்பட்டது.

- மாவட்டத்தில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயல்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் திணைக்களத்தினால் ரூ.158.57 மில்லியன் செலவிடப்பட்டது.

- மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு பாதுகாப்பு நிலையம் ரூ.1.08 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டது. அதேபோல், மடு பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு பாதுகாப்பு நிலையம் ரூ.1 மில்லியன் செலவில் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்டது.

- பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், கீழ்நிலைப் பகுதிகளில் வெள்ளப் பாதிப்பைக் குறைப்பதற்காக மண் வாய்க்காலின் இருபுறங்களிலும் தாங்குச் சுவர்கள் அமைப்பதற்காக ரூ.3.35 மில்லியன் செலவிடப்பட்டது.

- வெள்ள அனர்த்தங்களைத் தணிக்கும் நோக்கில் மண் வடிகால் அமைப்புகளை தூர்வாரும் பணிகளுக்காக பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூ.1.976 மில்லியன் செலவிடப்பட்டது.

- வெள்ளப் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் இயற்கை நீரோடைகளை சுத்தம் செய்தல் மற்றும் அகழ்வுப் பணிகளுக்காக காற்றாலை மின் திட்டத்தின் சமூகப் பொறுப்புணர்வு (CSR) நிதியிலிருந்து சுமார் ரூ.16 மில்லியன் செலவிடப்பட்டது.

- 2025ஆம் ஆண்டில் முதியோர் உதவித்தொகையாக ரூ.71.74 மில்லியன், மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையாக ரூ.212.11 மில்லியன் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான உதவித்தொகையாக ரூ.32.05 மில்லியன் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் மகளிர் பணியகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட “திவிய அருதக்” மகளிர் தொழில்முனைவோர் திட்டத்தின் கீழ் 12 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு ரூ.965,000.00 நிதி ஒதுக்கீட்டில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டில் நலன்புரி நன்மைகள் சபையின் திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் 12,741 தகுதியுடைய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், 22,653 குடும்பங்களுக்கு நலன்புரி நன்மைகள் சபையினால் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

- மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் ஆரம்ப சிறுவர் அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், 2,757 கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து கொடுப்பனவாக மொத்தம் ரூ.84.53 மில்லியன் வழங்கப்பட்டது.

- ஆரம்ப சிறுவர் அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், 651 முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவதற்காக மொத்தம் ரூ.10.17 மில்லியன் செலவிடப்பட்டது.

- ஆரம்ப சிறுவர் அபிவிருத்திக்கான தேசிய செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ், 12 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு "குரு அபிமானி" கொடுப்பனவாக மொத்தம் ரூ.824,000.00 மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் வழங்கப்பட்டது.

சவால்கள்

நானாட்டான், மடு மற்றும் முசலி பிரதேச செயலாளர் பிரிவுகளில் இலங்கை நிர்வாக சேவையின் (SLAS) தரம் ஐ உத்தியோகத்தர்கள் இல்லாத காரணத்தால், தரம் II உத்தியோகத்தர்கள் தற்போது தரம் I உத்தியோகத்தர்களுக்குரிய பொறுப்புகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், வவுனியா மாவட்டச் செயலகத்தின் பொறியியலாளர் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பணிகளையும் மேற்கொள்வதால் பணிச்சுமை அதிகரித்துள்ளது. மொழிபெயர்ப்பாளர், மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் மற்றும் வரைதொழில்நுட்பவியலாளர் ஆகிய பதவிகள் நீண்டகாலமாக வெற்றிடங்களாக காணப்படுகின்றன. அதேபோல், கணக்காளர், உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்), முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (MSO), சாரதி மற்றும் அலுவலக உதவியாளர் (OES) ஆகிய பதவிகளிலும் பல வெற்றிடங்கள் நிலவுகின்றன. மேலும், மாவட்டச் செயலகத்திலும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நிரந்தர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மன்னார் தீவு தாழ்நிலப் பிரதேசமாகவும், அதனைச் சூழ்ந்துள்ள நிலப்பகுதிகள் மலவத்து ஓயா உள்ளிட்ட ஆறுகளின் கரையோரப் பகுதிகளாகவும் அமைந்துள்ளன. இதன் காரணமாக மாவட்டம் கனமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் சூறாவளி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு அடிக்கடி முகங்கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இவ்வாறான இயற்கை அனர்த்தங்கள் மக்களின் வாழ்வாதாரத்திற்கும் மாவட்டத்தின் உட்கட்டமைப்புகளுக்கும் குறிப்பிடத்தக்க பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

நிதி சவால்கள்

எமது மாவட்டம் நீண்டகாலமாக நிலவிய ஆயுத மோதல்களாலும் இடம்பெயர்வுகளாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான தேவை அதிகளவில் காணப்படுகிறது.

குறிப்பாக, உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள 1,280 கிலோமீற்றர் நீளமான வீதிகள் நிர்மாணிக்கப்படவும் மேம்படுத்தப்படவும் வேண்டியுள்ளது. மேலும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள 159.2 கிலோமீற்றர் நீளமான வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

எனினும், நிலவும் நிதிப் பற்றாக்குறை காரணமாக மேற்குறிப்பிட்ட அபிவிருத்திப் பணிகளை திட்டமிட்டவாறு நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் மாவட்டத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்வதில் சவால்கள் நிலவுகின்றன.

பௌதீக சவால்கள்

சில பிரதேச செயலகங்கள் இன்னும் பழைய மற்றும் குறுகிய கட்டிடங்களிலேயே இயங்கி வருகின்றன. இவ்வலுவலகங்களில் கணிசமான எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் பணியாற்றி வருகின்றபோதிலும், அவர்களின் பணிகளை திறம்படவும் பயனுள்ள வகையிலும் மேற்கொள்வதற்கு போதிய இடவசதி காணப்படவில்லை. இதன் காரணமாக அலுவலக நடவடிக்கைகளை சீராக முன்னெடுத்துச் செல்வதிலும், பொதுமக்களுக்கு விரைவான மற்றும் தரமான சேவைகளை வழங்குவதிலும் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. புதிய கட்டிட வசதிகளை ஏற்படுத்துதல் அல்லது தற்போதைய கட்டிடங்களை விரிவுபடுத்துதல் அவசியமான தேவையாகக் காணப்படுகிறது.

இலக்குகள்

மாவட்டத்தை நிலைபேறான அபிவிருத்தி நோக்கி வழிநடத்தும் வகையில், ஆளுகை முறைகளை வலுப்படுத்தவும் நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்தவும் இயங்காற்றல் மிக்க செயற்குழுக்கள் அமைக்கப்படும். இந்த அணுகுமுறையின் மூலம் நல்லாட்சியை ஊக்குவித்தல், திறனுள்ள மற்றும் பயனுள்ள பொது நிர்வாகத்தை உறுதிப்படுத்தல், மனித, நிதி மற்றும் உடல் வளங்களின் உகந்த பயன்பாட்டை மேம்படுத்தல் என்பன நோக்கமாகக் கொள்ளப்படுகின்றன. மேலும், அரச துறை, தனியார் துறை, அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களின் செயற்பாட்டுப் பங்களிப்பும் உறுதிப்படுத்தப்படும்.

❖ 2030 ஆம் ஆண்டளவில் தொழில்நுட்ப பயன்பாட்டில் முழுமையான திறன் கொண்ட பணியாளர்களைக் கொண்ட மனித வளத்தை உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

❖ 2028 ஆம் ஆண்டளவில் மன்னார் மாவட்டத்தின் அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய விரிவான தரவுத்தள அமைப்பு உருவாக்கப்படும்.

❖ 2030 ஆம் ஆண்டளவில் புதுப்பிக்கத்தக்க வளங்களின் பயன்பாட்டை அதிகபட்சமாக்கும் செயன்முறைகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

முன்னுரிமை மூலோபாயத் தலையீடுகள்

1. பொருளாதார வலுவூட்டல் மற்றும் சந்தை அபிவிருத்தி

- உள்ளூர் உற்பத்தியாளர்களை வலுப்படுத்தி ஊக்குவித்தல்.
- உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் நடவடிக்கைகளை ஊக்குவித்து, போட்டித்தன்மை வாய்ந்த சந்தைகளுக்கான அணுகலை மேம்படுத்தல்.

2. உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய அபிவிருத்தி

- இலக்கிடப்பட்ட விவசாய ஆதரவு திட்டங்கள் மூலம் உள்ளூர் உற்பத்தியை அதிகரித்தல்.
- நீண்டகால உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நிலைபேறான விவசாய நடைமுறைகளை ஊக்குவித்தல்.

3. இளைஞர் வலுவூட்டல் மற்றும் வேலைவாய்ப்பு மேம்பாடு

- அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மாவட்ட மட்ட தொழில் வாய்ப்பு கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.
- தொழில்சந்தையின் தேவைகளுக்கு ஏற்ப இளைஞர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் தொழில் வழிகாட்டல் மற்றும் தொழிற்பயிற்சி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

மேற்கூறிய மூலோபாயத் தலையீடுகள், ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மற்றும் அனைவரினதும் ஒத்துழைப்பின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதன் ஊடாக, மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நிலைபேறான சமூக-பொருளாதார அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கமுடிதல்.

……………………..

க. கனகேஸ்வரன்

மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்

மன்னார் மாவட்டம்

க. கனகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.

3. அத்தியாயம் 03- – வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை - 2025

3.1. நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025		குறிப்பு	உண்மை நிலை 2025	உண்மை நிலை 2024	
-	வருமானப் பெறுகைகள்		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளுர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	ஏசீஏ-1
-	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)		-	-	
-	வருமானமற்ற பெறுகைகள்		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		2,422,387,000	1,756,543,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		166,024,894	219,122,634	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		18,795,639	36,670,733	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)		**2,607,207,533**	**2,012,336,367**	
-	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)		**2,607,207,533**	2,012,336,367	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		-	46,700,000	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**2,607,207,533**	**1,965,636,367**	
	கழி : செலவினம்				
-	மீண்டுவரும் செலவினம்		-	-	
481,200,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	476,552,355	386,364,066	ஏசீஏ-2(ii)
5,030,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	4,172,523	92,221,396	ஏசீஏ-2(ii)
119,770,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	108,891,648	118,717,250	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ-2(ii)
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	ஏசீஏ-2(ii)
606,000,000	மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)		**589,616,526**	**597,302,712**	
	மூலதனம் செலவினம்				
142,000,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	110,393,125	35,300,240	ஏசீஏ-2(ii)
44,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	43,313,593	117,432,328	ஏசீஏ-2(ii)
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ஏசீஏ-2(ii)
3,000,000	திறன் விருத்தி	14	2,057,300	1,524,013	ஏசீஏ-2(ii)
115,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	81,429,428	-	ஏசீஏ-2(ii)
304,000,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		**237,193,446**	**154,256,581**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		146,003,672	153,697,113	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		30,905,957	54,280,637	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**176,909,629**	**207,977,750**	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		1,003,719,601	959,537,043	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		**1,603,487,932**	**1,006,099,324**	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		1,603,487,932	**1,006,099,324**	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			1,603,487,932	**1,006,099,324**	

1

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ -பீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2025 ரூபா	2024 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	1,134,648,724	1,084,422,136
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	81,975,610	69,865,291
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**1,216,624,334**	**1,154,287,427**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(271,589,134)	(263,678,230)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		1,134,648,724	1,084,422,136
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	353,564,744	333,543,521
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**1,216,624,334**	**1,154,287,427**

பக்க இலக்கம் 6 முதல் 52 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 53 முதல் 64 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/ பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர்:
பதவி:	பதவி:	
திகதி: 17/02/2026	திகதி: 15.02.2026	திகதி: 15.02.2026

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

க. கனகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.

பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சீ

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2025 ரூபா	**2024** ரூபா
<u>தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	51,306,663	43,172,780
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	2,422,387,000	1,756,543,000
முற்பணங்களை அறவிடல்	19,220,886	36,241,027
வைப்புக்களின் பெறுகை	166,024,894	219,122,634
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**2,658,939,443**	**2,055,079,441**
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு</u>		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	587,126,408	477,412,637
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	371,343	118,717,250
மூலதனச் சொத்துகளின் புனரமைப்பு, மூலதன மாற்றங்கள், திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள்	193,879,853	-
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,660,820,312	1,073,813,449
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	46,700,000
முற்பணக் கொடுப்பனவு	31,202,355	38,849,499
வைப்புக் கொடுப்பனவு	146,003,672	153,697,113
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**2,619,403,943**	**1,909,189,948**
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**39,535,500**	**145,889,493**
<u>முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
வட்டி	3,109,393	2,727,938
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	668,700	5,639,150
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**3,778,093**	**8,367,088**
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>		
மூலதனச் சொத்துகளின் நிர்மாணம்/இ கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள்	43,313,593	154,256,581
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**43,313,593**	**154,256,581**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(39,535,500)**	**(145,889,493)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

3.4. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ஏசீஏ - 2

2025 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல : 265

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

ரூபா

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல.	செலவினத் தலைப்பு	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.ஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (6)=(4)-(5)
நிகழ்ச்சித் திட்டம் (1)	(1) மீண்டுவரும்	596,000,000	10,000,000	-	606,000,000	589,616,526	16,383,474
	(2) மூலதனம்	189,000,000	115,000,000	-	304,000,000	237,193,446	66,806,554
	உப மொத்தம்	**785,000,000**	**125,000,000**	-	**910,000,000**	**826,809,972**	**83,190,028**
நிகழ்ச்சித் திட்டம் (2)	(1) மீண்டுவரும்	-	-	-	-	-	-
	(2) மூலதனம்	-	-	-	-	-	-
	உப மொத்தம்	-	-	-	-	-	-
	முழு மொத்தம்	**785,000,000**	**125,000,000**	-	**910,000,000**	**826,809,972**	**83,190,028**

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 16. 02. 2026

ஏசீஏ-3

2025 ஆம் ஆண்டிற்கான பணி முற்பண கணக்கின் அறிக்கை

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

செலவின தலைப்பு இல : 265

ரூபா

முற்பணக் கணக்கு இலக்கம்	2025 சனவரி 1 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 1			கிடைக்கப்பெற்ற பணிமற்பணம் 2			தீர்க்கப்பட்ட பணிமற்பணம் 3			2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 4			2025 டிசம்பர் 31 இல உள்ளவாறான நிறுவன புத்தகங்களின் படி பணமுற்பண மீதி	2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின் படி பணிமுற்பண மீதி
	கொடுத்துத் தீர்க்காத உப முற்பணம் 1(i)	தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள் (தீர்க்கப்படாத உப பணிமுற்பணங்கள் தவிர்ந்த) 1(ii)	மொத்தம் 1(iii)	திறைசேரி 2(i)	ஏனைய மூலங்கள் 2(ii)	மொத்தம் 2(iii)=2(i)+2(ii)	செலவினம் 3(i)	காசு 3(ii)	மொத்தம் 3(iii)=3(i)+3(ii)	தீர்க்கப்படாத உப பணிமற்பண மீதி 4(i)	தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள் 4(ii)	மொத்தம் 4(iii)=4(i)+4(ii)	*5 5=1(iii)+2(iii)-3(iii)	6
283/25	-	-	-	2,422,387,000	153,900,117	2,576,287,117	2,576,287,117	-	2,576,287,117	-	-	-	-	-

1. மேலே 4 மற்றும் 6 மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டுக்கான காரணத்தைக் காட்டுக.
   (1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2025.12.31 திகதியன்று பண மீதி ....
   (2) ஏனைய காரணங்கள்- ....

இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 16. 02. 2026

*இந்த மீதி நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் காட்டப்படவேண்டும்

ஏசீஏ -4

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் கூற்று

செலவின தலைப்பு இல : 265

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

ரூபா

வைப்புக் கணக்குகளின் பெயர்	வைப்பு இலக்கம்	2025 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி	வருடக் காலப்பகுதியில் செலவு வைக்கப்பட்டது	வருடக் காலப்பகுதியில் வரவு வைக்கப்பட்டது	2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	திறைசேரிப் புத்தகங்களின்படி 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி
பிணை வைப்புகள்	6000-0-0-1-0-103	-	150	150	-	-
மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்த வேண்டி தற்காலிகமாகத் நிறுத்தி வைக்கப்பட்ட வைப்புகள்	6000-0-0-13-98	826,558	71,592,002	65,851,596	6,566,964	6,566,964
மாகாண சபைகளுக்கு வருமானங்களை மாற்றுதல்	6000-0-0-14-0-17	3,905,795	13,607,809	13,358,489	4,155,115	4,155,115
நிர்மாணத்திற்காக வைத்திருந்த பணம்	6000-0-0-16-0-89	31,878,353	31,627,482	20,791,527	42,714,308	42,714,308
நட்டஈடு	6000-0-0-17-0-28	290,023,363	1,176,513	202,160	290,997,716	290,997,716
நியதிச் சட்டமுறைக் கொடுப்பனவுகளுக்காக தற்காலிகமாக வைத்திருந்த பணம்	6000-0-0-18-0-93	80,775	553,384	568,509	65,650	65,650
செலவினத்தின் மீள்நிரப்பலுக்காகக் கிடைத்த நிதி	6000-0-0-20-0-16	6,828,678	47,467,554	45,231,241	9,064,991	9,064,991
		333,543,522	**166,024,894**	**146,003,672**	**353,564,744**	**353,564,744**

* தொடர்புடைய வைப்பு இலக்கங்களை மாத்திரம் உள்ளடக்கி இந்த மாதிரிப்படிவம் திருத்தியமைக்கப்பட வேண்டும்

....

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 15.02.2026

ஏசீஏ- 5

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்குகள் கூற்று

செலவின தலைப்பு இல : 265

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

ரூபா

முற்பண கணக்குகளின் பெயர்	முற்பண கணக்கு இலக்கம்	2025 சனவரி 01 இல் உள்ளவாறு மீதி	செலவினத்தின் அதிகபட்ச எல்லைகள் ரூபா 30,000,000		பெறுகைகளின் அதிகபட்ச எல்லை ரூபா 20,000,000		வரவு மீதியின் அதிகபட்ச எல்லை ரூபா 80,000,000	பொறுப்புக்களின் அதிகபட்ச எல்லை ரூபா	2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின் படி மீதி
			வருடத்தினுள் வரவு வைத்தல்		வருடத்தினுள் செலவு வைத்தல்		உள்ளவாறு மீதி		
		(1)	(2)		(3)		4=(1)+(2)-(3)		
			காசாக	குறுக்குப் பதிவுகளினூடாக	காசாக	குறுக்குப் பதிவுகளினூடாக			
(1) அரசாங்க அலுவலர்களின் முற்பணம்	26501	69,865,291	29,799,456	1,106,502	17,827,506	968,133	81,975,610	-	81,975,610
(2) ஏனைய முற்பணங்கள்									
(3) நானாவித முற்பணங்கள்									

....

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 15.02.2026

6:55 PM New CIGAS | Web APP

ACA 6

Generate

Cumulative Non Financial Asset Accounts Report- Central Govt-2025

NEW CIGAS FINAL 2025 REPORTS

Land-9153:	29,870,000.00	**Table:**	SA 82
Building- 9151:	580,745,145.57	**Year:**	2025
Machinary-9152:	280,062,536.01	**Rpt Date**	2/11/2026 6:55:39 PM
WIP-9160:	243,971,042.77	**Head**	265
Intangible-9154:	**0.00**		
Lease-9180:	**0.00**		

Ledger	category	Item	Code	Opn_Bal	Opn_Bal_Add	TransferIn	Purchase	Disposal	Balance
9151	1.1-Dwellings		61111	176,958,254.97	0.00	0.00	0.00	0.00	176,958,254.9
		Quarters	****6111107	125,213,136.75	0.00	0.00	0.00	0.00	125,213,136.7
		Circuit Bunglows	****6111108	51,745,118.22	0.00	0.00	0.00	0.00	51,745,118.22
9151	1.2-Non Residential Building		61112	403,786,890.60	0.00	0.00	0.00	0.00	403,786,890.6
		Office Building	****6111201	403,786,890.60	0.00	0.00	0.00	0.00	403,786,890.6
9160	1.4-WIP-Building & Structure		61114	243,971,042.77	0.00	0.00	0.00	0.00	243,971,042.7
		Quarters	****611146	55,030,392.77	0.00	0.00	0.00	0.00	55,030,392.77
		Office Building	****611148	188,940,650.00	0.00	0.00	0.00	0.00	188,940,650.0
9152	2.1-Transport Equipment		61121	82,681,500.00	0.00	0.00	0.00	4,000,000.00	78,681,500.00
		Passenger vehicle	****6112101	78,176,500.00	0.00	0.00	0.00	4,000,000.00	74,176,500.00
		Agricultural vehicle	****6112103	4,200,000.00	0.00	0.00	0.00	0.00	4,200,000.00
		Motor cycle	****6112109	305,000.00	0.00	0.00	0.00	0.00	305,000.00
9152	2.2-Other Machinary & Equipment		61122	147,601,656.63	11,925,546.99	2,351,648.74	43,340,683.16	3,838,499.51	201,381,036.0
		Office Equipment	****6112201	5,540,291.73	151,357.29	0.00	2,102,716.05	38,218.00	7,756,147.07
		Computer Equipment	****6112202	43,846,103.40	2,694,494.80	1,965,408.00	16,221,167.08	2,008,449.00	62,718,724.28
		Electrical Equipment	****6112203	41,026,128.64	8,875,570.00	386,240.74	13,431,886.77	1,270,896.26	62,448,929.89
		Communication Equipment	****6112204	4,072,623.29	0.00	0.00	170,637.96	600.00	4,242,661.25
		Furniture	****6112205	52,996,099.57	204,124.90	0.00	7,718,655.30	520,336.25	60,398,543.52
		Musical Instruments	****6112206	0.00	0.00	0.00	391,620.00	0.00	391,620.00
		Sports equipment	****6112208	20,000.00	0.00	0.00	0.00	0.00	20,000.00
		Books Periodical & Journals	****6112210	1,400.00	0.00	0.00	0.00	0.00	1,400.00
		Construction Eqipment	****6112213	53,660.00	0.00	0.00	3,304,000.00	0.00	3,357,660.00
		Agricultural & Dairy Farm Equipment	****6112216	45,350.00	0.00	0.00	0.00	0.00	45,350.00
9153	4.1-Land		61410	29,870,000.00	0.00	0.00	0.00	0.00	29,870,000.00
		Land	****614100	29,870,000.00	0.00	0.00	0.00	0.00	29,870,000.00

REMARKS
This is a computer-generated document. No signature is required.
-

Report Generated by the new CIGAS Web Application--Developed by Department of State Accounts, Ministry of Finance Planing and Economic Development.

Print

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

CIGAS. All Rights Reserved. Powered by Ministry of Finance Planing and Economic Development

ஏசிஏ-7

பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கை

அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக பிற நிறுவனங்களால் சேகரிக்கப்படும் வருவாய்	-	
மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தால் ஏற்படும் செலவு	1,660,820,312	
பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட வரவு	296,398	
பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட செலவு	968,132	1,662,084,842
குறைவாக:		
மற்ற நிறுவனங்களின் சார்பாக அறிக்கையிடல் நிறுவனத்தால் சேகரிக்கப்படும் வருவாய்	55,084,755	
அறிக்கையிடல் நிறுவனத்தின் சார்பாக மற்ற நிறுவனங்களால் செய்யப்படும் செலவு	2,118,775	
பிற நிறுவனங்களின் அட்வான்ஸ் "பி" கணக்கில் அறிக்கையிடல் நிறுவனத்தி செய்யப்பட்ட செலவு	1,393,380	
பிற நிறுவனங்களால் அறிக்கையிடல் நிறுவனத்தின்அட்வான்ஸ் "பி" கணக்கிற்கு செய்யப்பட்ட வரவு	-	58,596,910
2025 டிசம்பர் 31 இல் உள்ள பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		**1,603,487,932**

* மேலே குறிப்பிட்டுள்ளவற்றுக்கு கூடுதலாக ஏதேனும் தேவையெனில் சேர்க்கலாம்.

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

52

பின்னிணைப்பு-(i)

நட்டம் மற்றும் கைவிடுதல் பற்றிய கூற்று

(நி.ஒ. 106 மற்றும் நி.ஒ 113 இன் கீழான நட்டம்)

செலவினத் தலைப்பு இல: 265

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

(i) வருடத்தினுள் நட்டத்தை அறவிடுதல்/ வெட்டி நீக்குதல் / கைவிடுதல் பற்றிய கூற்றுக்கள்

பெறுமதி		நிகழ்வுகளின் எண்ணிக்கை	முழு மொத்தம் (ரூபா)
ரூபா 25,000.00	கீழ்		
ரூபா 25,000.01	மேல்	Nil	
மொத்தம்			

நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளி வகை	நிகழ்வுகளின் எண்ணிக்கை	பெறுமதி (ரூபா)
1 Nil		
2		
3		
4		
மொத்தம்		

(ii) தொடர்ந்தும் அறவிடுவதற்கு அல்லது வெட்டி நீக்குவதற்கு அல்லது கைவிடுவதற்கு இருக்கின்ற நட்டம் பற்றிய கூற்று

பெறுமதி		நிகழ்வுகளின் எண்ணிக்கை	முழு மொத்தம் (ரூபா)
ரூபா 25,000.00	கீழ்		
ரூபா 25,000.01	மேல்	Nil	
மொத்தம்			

நட்டத்தின் தன்மையின் பிரகாரம் நிகழ்வுகளின் வகை	நிகழ்வுகளின் எண்ணிக்கை	பெறுமதி (ரூபா)
1 Nil		
2		
3		
4		
மொத்தம்		

(ii) பிரகாரம் காலப் பகுப்பாய்வு

5 வருடத்திற்குக் கீழ்	நிகழ்வுகளின் எண்ணிக்கை : Nil	
	தொகை	ரூபா
5-10 வருடங்கள்	நிகழ்வுகளின் எண்ணிக்கை	
	தொகை	ரூபா
10 வருடத்திற்கு மேல்	நிகழ்வுகளின் எண்ணிக்கை	
	தொகை	ரூபா

குறிப்பு - செலவினத் தலைப்பு 1701 இன் கீழ் வருடத்தினுள் கணக்கு வைக்கப்பட்ட அல்லது முன்வரும் வருடங்களில் கணக்கு வைக்கவிருக்கின்ற நி.ஒ. 106 இன் கீழிருக்கின்ற தீங்கு மற்றும் நி.ஒ. 113 இன் கீழான கைவிடுதல் பற்றிய விபரத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

* அறிக்கையிடும் நிறுவனங்களில் இந்த அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் இல்லை என்றால் இல்லை என அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி : 15.02.2026

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

53

26, 4:46 PM New CIGAS | Web APP

Annexure (iii)

Generate --

Cumulative Commitment/ Liability Report for the Year - 2025

To
District Secretariat Mannar (265)
From
Director General, ,
Department of State Accounts, ,
General Treasury, Colombo1. .

Printed by Mathurananthan
New Table No :SA-92
Old Table No :--
Report Date 2/6/2026 4:46:33 PM

NEW CIGAS FINAL 2025 REPORTS

Nature	Commit_No	Date	To_whom	Vote	Commitment	Commit_bal	L_Date	Liability_amt	Revised_Lia	Paid	Liability_Bal	Reported_By
Govt	C2512845	31 Dec 2025	President Farmers Organization Kalmadhu II	MAD-265-1-01-014-2509-000/11-P	172,954.95	0.00	05 Jan 2026	172,954.95	0.00	0.00	172,954.95	265
Govt	C2512846	31 Dec 2025	President Farmers Organization Keerisuddan	MAD-265-1-01-014-2509-000/11-P	81,586.09	0.00	05 Jan 2026	81,586.09	0.00	0.00	81,586.09	265
Govt	C2512847	31 Dec 2025	President Farmers Organization Sinnavalayankaddu	MAD-265-1-01-014-2509-000/11-P	190,299.67	0.00	05 Jan 2026	190,299.67	0.00	0.00	190,299.67	265
Govt	C2512848	31 Dec 2025	President Farmers Organization Palampiddy	MAD-265-1-01-014-2509-000/11-P	185,098.23	0.00	05 Jan 2026	185,098.23	0.00	0.00	185,098.23	265

This is a computer-generated document. No signature is required.
Report Generated by the new CIGAS Web Application--Developed by Department of State Accounts, Ministry of Finance Planing and Economic Development..

Print

ew CIGAS. All Rights Reserved. Powered by Ministry of Finance Planing and Economic Development . -

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

பின்னிணைப்பு-(viii)

2015/10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இல் (1) ஆவது பந்தியின் அறிவுரைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்ககள் பற்றிய 2025.12.31ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

செலவினத் தலைப்பு இல: 265

மாவட்டச் செயலகத்தின் பெயர் : மன்னார்

தொடர் இல.	வங்கியின் பெயர்	கணக்கு இலக்கம்	2025.12.31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி	2025.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி	2025.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்)	இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம்
			(ரூபா.)	(ரூபா.)		
1	இலங்கை வங்கி	0007041949	-	-	-	டிசம்பர் 2025
2	இலங்கை வங்கி	0007041952	262,168,434	-	-	டிசம்பர் 2025
3	இலங்கை வங்கி	0007041958	116,945,874	-	-	டிசம்பர் 2025
4	இலங்கை வங்கி	0007041959	72,105,884	-	-	டிசம்பர் 2025
5	இலங்கை வங்கி	0007041960	42,728,029	-	-	டிசம்பர் 2025
6	இலங்கை வங்கி	0007041961	133,755,565	-	-	டிசம்பர் 2025
7	இலங்கை வங்கி	0007041964	64,712,421	-	-	டிசம்பர் 2025
	மொத்தம்		692,416,207			

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

....
பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி : 6.02.2026

58

3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீடு %
1003.07.02	பதிவாளர் நாயகம் திணைக்களம் தொடர்பிலான பதிவுக் கட்டணங்கள்	6,327,000.00	6,327,000.00	6,720,090.00	106.21
1003.07.03	தனியார் மரப் போக்குவரத்து	63,000.00	63,000 .00	52,118.00	82.73
1003.07.05	பாதுகாப்ப அமைச்சு தொடர்பான அனுமதிப்பத்திர வரி	9,000.00	9,000.00	8,400.00	93.33
1003.07.99	ஏனைய அனுமதிப்பத்திர வரி	844,000.00	844,000.00	689,506.00	81.70
2002.01.01	அரச கட்டடங்கள் மற்றும் வீடுகள் மீதான வாடகை	3,716,000.00	3,716,000.00	4,448,596.21	119.71
2002.02.99	பிற வட்டி	2,728,000.00	2,728,000.00	3,109,392.90	113.98
2003.02.13	பரீட்சைகள் மற்றும் ஏனைய கட்டணங்கள்	3,500.00	3,500.00	12,000.00	342.86
2003.02.14	மோட்டார் கோக்குவரத்துச் சட்டத்தின் கீழான கட்டணங்களும் ஏனைய பெறுகைகளும்	2,579,000.00	2,579,000.00	2,418,880.00	93.79
2003.02.03	1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழான கட்டணம்	3,028,000.00	3,028,000.00	2,669,530.00	88.16
2003.02.06	பினோரா மற்றும் புளொரா பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டணம்	180,600.00	180,600	71,350.00	39.51
2003.02.99	நானாவித வருமானங்கள்	180,300.00	180,300.00	463,646.59	257.15
2003.99.00	ஏனைய பெறுகைகள்	8,068,000.00	8,068,000.00	6,668,268.48	82.65
2004.01.00	சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு மற்றும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு	18,175,000.00	18,175,000.00	27,084,277.17	149.02
2006.02.01	மூலதனச் சொத்துக்களின் விற்பனை - வாகனம்	5,277,000.00	5,277,000.00	0.00	0.00
2006.02.02	மூலதனச் சொத்துக்களின் விற்பனை - ஏனையவை	362,400.00	362,400.00	668,700.00	184.52
மொத்தம்		**51,540,800.00**	**51,540,800.00**	**55,084,755.00**	**106.88**

3.6. ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவீனம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் மதிப்பீடு	இறுதி மதிப்பீடு		
மீண்டுவரும் செலவினம்				
ஆளுக்குரிய வேதனங்கள்				
1001 - சம்பளமும் கூலியும்	254,000,000	316,500,000	314,745,644.89	99.45
1002 - மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	8,300,000	10,000,000	9,576,051.58	95.76
1003 - ஏனைய கொடுப்பனவுகள்	186,000,000	154,700,000	152,230,659.42	98.40
பிரயாணச் செலவினம்				
1101 - உள்ளூர்	5,700,000	5,030,000	4,172,522.56	82.95
வழங்கல்கள்				
1201 - எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்	15,500,000	13,820,000	13,459,182.60	97.39
1202 - எரிபொருள்				
002- எரிபொருள் கொடுப்பனவு	5,700,000	4,600,000	4,560,425.66	99.14
009- குழும வாகன எரிபொருள்	11,100,000	6,950,000	6,591,013.98	94.83
010- ஏனைய எரிபொருள் செலவு	5,800,000	2,150,000	1,958,378.36	91.09
1203 - உணவும் சீருடைகளும்	2,164,000	2,104,000	2,045,500.00	97.22
002 - சீருடை	2,164,000	2,104,000	2,045,500.00	97.22
1205 - ஏனையவை	2,936,000	2,936,000	2,828,517.20	96.34
பராமரிப்புச் செலவினங்கள்				
1301 - வாகனங்கள்	17,800,000	17,800,000	15,800,800.82	88.77
1302 - பொறி, இயந்திரம், உபகரணம்	8,000,000	7,650,000	7,142,528.61	93.37
1303 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	11,500,000	11,200,000	10,409,967.61	92.95
1304 – மென்பொருள் பராமரிப்பு	2,000,000	420,000	224,299.29	53.40
சேவைகள்				
1401 - போக்குவரத்து	1,750,000	1,300,000	1,246,899.55	95.92
1402 - தபால், தொலைத்தொடர்பு	8,000,000	5,850,000	5,205,511.46	88.98
1403 - மின்சாரமும் நீரும்	16,000,000	11,400,000	9,449,969.71	82.89
1404 - வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	1,100,000	550,000	513,056.94	93.28
1405 – துப்புரவு மற்றும் சுத்திகரிப்பு சேவை	13,000,000	10,800,000	10,517,408.51	97.38
1407 – பாதுகாப்பு சேவை	7,500,000	10,950,000	9,908,801.57	90.49
1409 - ஏனையவை				
138- இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான சேவை ஒப்பந்தம்	3,800,000	2,300,000	1,896,497.95	82.46
139- வாகன காப்புறுதி	2,250,000	1,540,000	774,885.23	50.32
140- எதிர்பாராத செலவினங்கள்	5,000,000	5,000,000	3,986,659.68	79.73
மாற்றங்கள்				
1506 - அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	1,100,000	450,000	371,343.12	82.52
முழு மொத்தம்	**596,000,000**	**606,000,000**	**589,616,526.30**	**97.29**

மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்				
2001 - கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்				
048 - மாவட்டச் செயலகம்	50,000,000	50,000,000	32,767,766.64	65.54
049 - பிரதேச செயலகம்	69,800,000	69,800,000	69,472,678.18	99.53
2002 - பொறி, இயந்திரம், உபகரணம்	6,000,000	6,000,000	5,971,423.45	99.52
2003 - வாகனங்கள்	16,200,000	16,200,000	2,181,257.46	13.46
மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு				
2102 - தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்	20,000,000	20,000,000	19,796,485.95	98.98
2103 - பொறி, இயந்திரம், உபகரணம்	24,000,000	24,000,000	23,517,106.69	97.99
மனித வள அபிவிருத்தி				
2401 - பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	3,000,000	3,000,000	2,057,299.89	68.58
ஏனைய மூலதனச் செலவுகள்				
2509 - ஏனையவை	-	115,000,000	81,429,427.74	70.81
மொத்தம்	**189,000,000**	**304,000,000**	**237,193,446.00**	**78.02**
முழு மொத்தம்	**785,000,000**	**910,000,000**	**826,809,972.30**	**90.85**

3.7. நி.பி குறிப்பு 208 பிரகாரம் மாவட்டச் செயலக செலவினத்திற்கான ஒதுக்கீடு

தொ. இல	தலைப்பு	ஆமைச்சு / திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவீனம்	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டு பயன்பாடு
				அசல்	இறுதி		
1.	001	ஜனாதிபதி செயலகம்	தேசிய உற்பத்திதிறன் விருது, தேசிய சிறுவர் தின நிகழ்வு, "கிளீன் ஸ்ரீலங்கா" சமூக உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி	4,259,000.00	4,259,000.00	3,046,408.90	**71.53**
2.	020	தேர்தல் ஆணையம்	உள்ளூராட்சி தேர்தல் கடமையில் ஈடுபட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள்	5,242,939.75	5,242,939.75	5,240,479.75	**99.95**
3.	101	புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு	விகாரை புனரமைப்பு, மண்டபம் புனரமைப்பு, இலங்கை தேசிய தின நிகழ்வு	2,021,000.00	2,021,000.00	2,017,950.42	**99.85**

4.	102	நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு	முதியோர், மாற்றாற்றல் உள்ளோர், நிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோருக்கான கொடுப்பனவுகள் மற்றும் நலன்புரி நன்மைகள் தொடர்பான நிர்வாக செலவுகள்	323,996,390.00	323,996,390.00	322,908,367.43	**99.66**
5.	103	பாதுகாப்பு அமைச்சு	அனர்த்த பாதுகாப்பு நிலையங்கள் புனரமைப்பு, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள் புனரமைப்பு, வெள்ளநீர் வடிகாலமைப்புகள் புனரமைப்பு செய்தல்,இயற்கை அனர்த்தத்தால் (டிட்வா) பாதிக்கப்பட்டோருக்கான சமைத்த உணவு வழங்கல், உலர் உணவு வழங்கல், வீட்டு உபகரணங்கள் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கான கொடுப்பனவுகள், வீடுகளை இழந்தோருக்கான வாடகைக் கொடுப்பனவு மற்றும் சம்பளமும் ஏனைய நடைமுறைச் செலவுகளும்.	1,469,895,867.25	804,895,867.25	641,262,474.04	**79.67**
6.	110	நீதி, மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சு	மத்தியஸ்தர் சபைக்கான கொடுப்பனவு, தேசிய மொழிகள் தினம் 2025, பல மதக் குழுக்களுக்கிடையிலான சமாதானம், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சி, சம்பளமும் ஏனைய கொடுப்பனவுகளும்	8,631,881.00	8,631,881.00	5,902,468.80	**68.38**
7.	111	சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு	குடிநீர் சுத்திகரிப்பு இயந்திர செலவு, மருந்து உற்பத்தி இயந்திரம் கொள்வனவு, சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	1,198,096.00	1,198,096.00	1,061,589.52	**88.61**

8.	112	வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு	பயணச் செலவுகள், எழுதுபொருட்கள், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், சுற்றுலாப் பிரதேசங்களுக்கான சாத்தியக்கூறு ஆய்வு நிகழ்ச்சி, சுயதொழில் பயிற்சி நிகழ்ச்சி	327,000.00	327,000.00	243,523.65	**74.47**
9.	117	போக்குவரத்து , நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு	கிராமிய வீதிகள் அபிவிருத்தி திட்டம்	200,000,000.00	200,000,000.00	151,571,764.08	**75.79**
10.	118	விவசாயம், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு	‘பிம்சவிய’ திட்டம், தளபாடக் கொள்வனவு, சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள், காணி கொள்வனவுக்கான நிர்வாகச் செலவுகள், களஞ்சியசாலையின் புனரமைப்பு, மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம், வாகன சேவை.	15,563,749.00	15,563,749.00	14,225,149.15	**91.40**
11.	123	நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு	வீட்டுத்திட்டம், குடிநீர் இணைப்புத்திட்டம், மின்சார இணைப்புத் திட்டம் மற்றும் உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டம்	181,721,039.62	181,721,039.62	153,746,565.28	**84.61**
12.	124	கிராமிய அபிவிருத்தி, சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுடுஅமைச்சு	சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள், கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், இணைய அடிமை மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து மாணவர்களை மீட்கும் நிகழ்ச்சி, ஏற்றுமதி நோக்கமுடைய பனங்காய் கூழ் உற்பத்தி, வெங்காய பயிர்செய்கை திட்டம், ‘ப்ரஜா‘ சக்தி’ பயிற்சி நிகழ்ச்சி,	17,211,726.00	17,211,726.00	15,312,281.42	**88.96**

13.	126	கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு	எழுதுகருவிகள் கொள்வனவு, போக்குவரத்து கொடுப்பனவு	181,700.00	181,700.00	141,939.15	**78.12**
14.	130	பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	சுற்றுலா விடுதிக்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகள், வெளிநாட்டுப்பயண கொடுப்பனவு, சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	18,771,740.00	18,771,740.00	14,613,318.86	**77.85**
15.	149	கைத்தொழில் மற்றம் தொழில் முயற்சியாண் மை அபிவிருத்தி அமைச்சு	சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்க ான திட்டங்கள், உபகரணங்கள் கொள்வனவு, சம்பளம் மற்றும் ஏனைய நடைமுறைச் செலவுகள்	5,547,852.82	5,547,852.82	5,010,491.54	**90.31**
16.	151	கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு	மாவட்ட மீனவ ஒருங்கிணைப்புக்குழு க் கூட்டம்	32,600.00	32,600.00	32,600.00	**100.00**
17.	160	சுற்றாடல் அமைச்சு	சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய நடைமுறைச் செலவினங்கள், உலக சுற்றாடல் தினம், கடலரிப்பு தடுப்பு அணை (Groyne) பாதுகாப்பு மேம்பாட்டு பணிகள், , உலக உணவுத் திட்டம் (WFP) ஆதரவுடன் நடத்தப்பட்ட ADAPT4R நடவடிக்கைகள்.	37,740,449.00	37,740,449.00	31,006,408.96	**82.16**
18.	171	மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு	கர்ப்பிணித்தாய்மார்களுக்கான போசாக்கு உணவு, குரு அபிமானி, முன்பள்ளிக்கான காலை உணவு, பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சிகள், சிறுவர் கழக கூட்டங்களுக்கான செலவுகள், உளவள ஆலோசனைகள், சம்பளம் மற்றும் ஏனைய நடைமுறைச் செலவுகள்	107,278,614.90	107,278,614.90	97,809,945.25	**91.17**

19.	186	டிஜிடல் பொருளாதார அமைச்சு	தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கான செலவுகள், பிரஜாசக்தி தேசிய வேலைத்திட்டம்	19,000,000.00	19,000,000.00	14,809,687.67	**77.95**
20.	189	பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு	கூட்டங்களுக்கான செலவு, தபால்,காகிதாதி மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	95,220.00	95,220.00	44,069.40	**46.28**
21.	194	இளைஞர் சேவை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு	விளையாட்டு வாரம் மற்றும் ஏரோபிக் உடற்பயிற்சி நிகழ்ச்சி	200,000.00	200,000.00	132,000.00	**66.00**
22.	196	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு	தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சி, உலக தொழில்முனைவு வார நிகழ்ச்சி, மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு, மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு, அஞ்சல், எழுதுபொருட்கள், மின்சாரம், நீர் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	1,918,075.00	1,918,075.00	1,841,029.43	**95.98**
23.	201	பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்	தம்மா பாடசாலைக் கொடுப்பனவுகள்	10,000.00	10,000.00	10,000.00	**100.00**
24.	202	முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்	மஸ்ஜிதுன் நூர் பள்ளியில் மலசலகூட நிர்மானம், காகிதாதி செலவுகள்	410,000.00	410,000.00	410,000.00	**100.00**
25.	203	கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்	கறோல் போட்டி செலவுகள், காகிதாதி செலவுகள் மற்றும் மடுதேவாலய யாத்திரிகர் விடுதி நிர்மான செலவுகள்	40,400,800.00	40,400,800.00	28,396,684.77	**70.29**
26.	206	கலாசார அலுவல்கள் திணைக்களம்	டொலஸ்மஹே பஹன, கலைஞர்களுக்கான கௌரவிப்பு, பிராந்திய மாவட்ட இலக்கிய விழா நிகழ்வுகள், கூட்டங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	847,100.00	847,100.00	764,446.82	**90.24**
27.	210	அரசாங்க தகவல் திணைக்களம்	செய்தித்தாள் கொள்வனவு, காகிதாதி, தொடர்பாடல் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	24,800.00	24,800.00	14,822.56	**59.77**

28.	216	சமூக சேவைகள் திணைக்களம்	மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு நிகழ்வு, சமுதாயம்சார் மறுசீரமைப்பு திட்டம், தேசிய கலாசார நிகழ்ச்சி “சித் ரூ–2025”, மாற்றுத்திறனாளிகளுக்கான சுயஉதவி பயிற்சி நிகழ்ச்சி, ESU நிகழ்ச்சி, “திறிய தேசிய வர்த்தக மற்றும் தொழில்வாண்மை திறன் கண்காட்சி”, சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள்.	9,805,190.00	9,805,190.00	9,180,071.00	**93.62**
29.	217	நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்	மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம், பிரதேச கண்காணிப்பு குழு, சிறுவர் கவுன்சில்கள், இரட்டைக்குழந்தைகளுக்கான உதவி, மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து உதவிகள், “கபகரு தெகுரு” திட்டம், அலங்காரப் பொருட்கள் கொள்வனவு, அவசர நிவாரண உதவிகள், உலக சிறுவர் தின நிகழ்ச்சி.	1,056,800.00	1,056,800.00	1,035,744.52	**98.01**
30.	219	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்	உள்ளக விளையாட்டரங்கு நிர்மாணம், நீச்சல் குளம் திறப்பு விழா, பயணச் செலவுகள், எழுதுபொருட்கள், தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள்.	54,851,040.00	3,000,000.00	2,894,197.68	**96.47**
31.	227	ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் கொள்வனவு	7,201,027.48	7,201,027.48	7,066,709.12	**98.13**
32.	237	தேசியத ிட்டமிடல் திணைக்களம்	பண்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு வேலைத்திட்டங்கள்	23,000,000.00	23,000,000.00	18,382,641.70	**79.92**

33.	243	அபிவிருத்தி நிதித் திணைக்களம்	அரச தானிய களஞ்சியசாலைக்கான நடைமுறை செலவுகள் மற்றும் மூலதன செலவுகள் - களஞ்சியசாலை கட்டுமானம், உலர்த்தும் தளங்கள் அமைத்தல், உலர்த்தும் இயந்திர அலகிற்கான மோட்டார் கொள்வனவு, குழாய் கிணறு மோட்டார் மற்றும் புல் வெட்டும் இயந்திரம் கொள்வனவு.	10,462,450.00	10,462,450.00	9,130,122.76	**87.27**
34.	248	இலங்கை மதுவரித்திணைக்களம்	அலுவலகக் கட்டடம் மற்றும் மதிலுக்கான நிறப்பூச்சு பூசுதல்	2,000,000.00	2,000,000.00	1,960,813.55	**98.04**
35.	252	தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்	தொகை மதிப்பு திட்டங்கள், பயிற்சி நெறிகள், வாகன சேவை கொடுப்பனவு, மேலதிக நேரக் கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகள்	8,868,952.16	8,868,952.16	8,393,848.38	**94.64**
36.	253	ஓய்வூதியத் திணைக்களம்	ஓய்வூதியம், தபால் மற்றும் அச்சிடல் செலவு மேலதிக நேர கொடுப்பனவு	34,454,992.14	34,454,992.14	34,143,420.87	**99.10**
37.	284	வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்	வனவிலங்குகளால் பாதிக்கப்பட்டோருக்கான இழப்பீடுகள்	38,100.00	38,100.00	38,100.00	**100.00**
38.	286	காணி ஆணையாளர் நாயக திணைக்களம்	சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	779,901.00	779,901.00	778,566.00	**99.83**
39.	290	மீன் வளம் மற்றும் நீர்வளங்கள் திணைக்களம்	மீன்பிடி அதிகாரி அலுவலகங்களின் புனரமைப்பு வேலைகள்	1,951,259.64	1,951,259.64	1,809,282.99	**92.72**
40.	307	மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்	மேலதிக நேர கொடுப்பனவு, தபால், மின்சார கட்டணம், சுத்திகரிப்பு செலவு மற்றும் ஏனைய நடைமுறை செலவுகள்	1,079,000.00	1,079,000.00	961,464.29	**89.11**
41.	326	சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம்	போக்குவரத்து மற்றும் காகிதாதி செலவுகள்	267,000.00	267,000.00	229,877.42	**86.10**

42.	327	காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்	மாவட்ட மற்றும் பிரதேச மட்ட காணிபயன்பாட்டுக் குழுக்கூட்டம் மற்றும் காகிதாதி, போக்குவரத்து செலவு	793,500.00	793,500.00	763,378.86	**96.20**
43.	328	மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களம்	தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள், மாவட்ட வேலைவாய்ப்பு கண்காட்சி நிகழ்ச்சிகள், இளைஞர்களை வலுப்படுத்தும் ஸ்மார்ட் யூத் நிகழ்ச்சி, இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சி, டிஜிட்டல் தொழில் பணியாளர் பயிற்சி நிகழ்ச்சி, பயணச் செலவுகள், எழுதுபொருட்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள்.	666,718.66	666,718.66	583,888.24	**87.58**
மொத்தம்				**2,619,803,571.42**	**1,954,803,571.42**	**1,660,820,611.63**	**84.96**

3.8. நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை.

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2025 திகதிய சுற்றாய்வுச்சபை அறிக்கை படி மீதி	31.12.2025 திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி	எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது	அறிக்கையிடல் முன்னேற்றம் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	580,745,145.57	580,745,145.57	-	-
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	280,062,536.01	280,062,536.01	-	-
9153	காணி	29,870,000.00	29,870,000.00	-	-
9154	அருவமான சொத்துக்கள்	0	0	-	-
9155	உயிரியல் சொத்துக்கள்	0	0	-	-
9160	நடைபெறும் பணிகள்	243,971,042.77	243,971,042.77	-	-
9180	குத்தகை சொத்துக்கள்	0	0	-	-
மொத்தம்		**1,134,648,724.35**	**1,134,648,724.35**	-	-

3.9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. NPCG/MN/A/FA/DS/02/2025/01 ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2026 மே 26

கணக்கீட்டு உத்தியோகத்தர்
மன்னார் மாவட்டச் செயலகம்

தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை.

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 265 – மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2025 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 11(2) பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ அறிக்கை கணக்கீட்டு உத்தியோத்தருக்கு காலக்கிரமத்தில் சமர்பிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மன்னார் மாவட்டச் செயலகம், பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல்,தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராய மொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதியல்லாத சொத்துக்கள்

(அ) வாகனம் ஒன்றின் பெறுமதிகள் இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,600,000 ஆல் அதிகமாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 03 பிரதேச செயலகங்களினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் ஏலவிற்பனை மூலம் அகற்றப்பட்ட 202 எண்ணிக்கையான பொருட்களின் கிரயப் பெறுமதிகளினை நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து கழித்துக்காட்டாமல் ரூபா 487,105 ஆல் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மாவட்டச் செயலகம் மற்றும் மூன்று பிரதேச செயலகங்களால் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 21 புதிய மூலதன வேலைகளின் கூட்டுமொத்தம் ரூபா 46,355,464 நிதியல்லாச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ரூபா 3,555,500 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட மின்மாற்றி மற்றும் ரூபா 6,150,496 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட 07 கணினித் தொகுதிகள், 05 மடிகணினிகள், 06 நிழற்பட பிரதி இயந்திரங்கள், 06 புறொஜெக்டர்கள், 02 யூபிஎஸ் மற்றும் பிறின்டர் ஆகியன நிதியல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் 02 பிரதேச செயலகங்களினால் ஏல விற்பனை செய்யப்பட்டு அகற்றப்பட்ட ரூபா 10,000 கிரயப் பெறுமதியுடய நிழல்பட பிரதி இயந்திரம் மற்றும் ரூபா 45,000 கிரயமான மடி கணினி என்பவற்றிற்கு பதிலாக அலுவலகப் பயன்பாட்டில் காணப்படும் ரூபா 432,000 பெறுமதியான நிழல்பட பிரதி இயந்திரம் மற்றும் ரூபா 224,200 பெறுமதியான மடி கணினிகள் சொத்துகளிலிருந்து நீக்கப்பட்டமையினால் நிதியல்லாச் சொத்துக்கள் ரூபா 601,200 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்.

(அ) 05 மூலதன மற்றும் 16 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 223,034,000 தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 148,731,648 மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால் சேமிப்பு ரூபா 74,302,352 ஆக இருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50(ii) இன் பிரகாரம் மதிப்பீடுகள் முடிந்தவரை துல்லியமாகவும் முழுமையாகவும் தயாரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும் 12 செலவின விடயங்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு அளவில் 11 சதவீதம் முதல் 79 சதவீதத்திற்கிடையிலான நிதி ஏற்பாட்டின் அளவொன்று நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

2025 திசெம்பர் 17 ஆந் திகதிய 02/2025 இலக்கம் கொண்ட அரச கணக்குகள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான வழிகாட்டல் 03 இன் பந்தி 3.3 இன் பிரகாரம் 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடப்பாட்டு இலக்கத்திற்கு அமைவாக வெளிப்படுத்தப்படாத 10 விடயங்களுக்கான ரூபா 2,247,862 இற்கான பொறுப்புக்கள் 2026 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது.

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

(அ) 2025 ஆம் ஆண்டின் செலவின அறிக்கையின் பிரகாரம் 15 அமைச்சுக்களின் கூட்டுமொத்தம் 41 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 07 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 147,320,503 சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 05 அமைச்சுக்களினால் 08 மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்படாமையால் அந் நிதி ஏற்பாடுகளிலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டு மொத்தம் ரூபா 404,483 சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் 14 அமைச்சுக்களின் 19 மூலதனச் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் கூட்டுமொத்தம் ரூபா 808,245,350 ஆனது 10 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரை பயன்படுத்தப்படாது சேமிப்பாகக் காணப்பட்டிருந்தது.

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வதும் அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம்பெற வேண்டிய போதிலும், அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571	இரண்டு வருடங்களை மிகைத்துள்ள ரூபா 568,075 பெறுமதியான 06 வைப்புப் பணத்தை சம்பந்தப்பட்ட தரப்பினருக்குச் செலுத்துவதற்கோ அல்லது அரசாங்க வருமானத்தில் வரவு வைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(ஆ)	2020 செப்தெம்பர் 18 ஆந் திகதியிடப்பட்ட 16/2020 ஆம் இலக்க உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் இடர் முகாமைத்துவ பொது அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் 10 ஆந் பந்தி	பிரதேச செயலாளர்கள் குறைந்தபட்சம் 04 மாதங்களுக்கு ஒரு முறையாவது சகல கிராம அலுவலர் அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டிய போதிலும், 05 பிரதேச செயலகங்களின் கிராம அலுவலர் அலுவலகங்கள் அவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ)	2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவு	நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களின் பட்டியலை வருடத்திற்கொருமுறை புதுபிக்க வேண்டியிருந்த போதிலும் 05 பிரதேச செயலகங்களினால் பயனாளிகளின் பட்டியல் வருடத்திற்கொருமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2022 திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட 2310/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகளின் தொகுதி 01 இல் உள்ள XVIII ஆம் அத்தியாயத்தின் 251 ஆம் பிரிவு	மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களில், 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஒரே சேவை நிலையத்தில் 05 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த இணைந்த சேவையில் 55 அலுவலர்கள், 92 கிராம சேவை அலுவலர்கள் மற்றும் 124 அபிவிருத்தி அலுவலர்கள் தொடர்பில் இடமாற்ற நடைமுறை திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.
(உ)	2008/04 ஆம் இலக்கமும் 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதியும் கொண்ட காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை	ஐந்து பிரதேச செயலகங்களினால் பராமரிக்கப்படும் காணியற்ற நபர்களின் இடாப்பை ஒவ்வொரு வருடமும் இற்றைப்படுத்தி அவ் இடாப்பின் பிரதியினை மாகாண காணி ஆணையாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்குக் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3.6 செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

அரச நிதிச் சுற்றறிக்கை 01/2020 ஆல் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 (5) இன் பிரகாரம், செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்ட பிறகு, செயல் நிமித்த கட்டுநிதி சம்பந்தப்பட்ட பணி முடிந்த 10 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தின் முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் 65 சந்தர்ப்பங்களில் 10 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,027,284 பெறுமதியான செயல்நிமித்த கட்டுநிதியை தீர்வு செய்வதில் 13 முதல் 125 நாட்கள் வரையான தாமதம் இடம்பெற்றிருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் நகர பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் 866 குடியிருப்பாளர்களின் நலனுக்காக முன்னெடுக்கப்பட்ட கல்வெட்டு அமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு வீதியின் உள்ளக வீதிகளுக்கு மழை நீர் வழிந்தோடக்கூடிய வகையில் 03 ஹியூம் குழாய் (Hume pipe) இணைப்பிற்காக ரூபா 925,387 தொகை செலவிடப்பட்டிருந்தும் அதன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை. அத்துடன் அவ் வீதியினால் செல்லும் வாகனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

4.1.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

கிராமிய அபிவிருத்தி, சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் பரவலாக்கப்பட்ட வரவு செலவு திட்ட நிதியேற்பாடுகளின் கீழ் பனம் பொருள் சார் உற்பத்தியுடன் தொடர்புள்ள 49 பயனாளிகளின் வாழ்வாதரத்தை மேம்படுத்தி அதனூடாக எதிர்காலத்தில் 100 வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் மீளாய்வாண்டில் பனம் பொருள் சார் உற்பத்தி நிலைய கட்டிட புனரமைத்தல், இயந்திரம் கொள்வனவு மற்றும் பயனாளிகளுக்கு பயிற்சி வழங்குவதற்காக ரூபா 9.1 மில்லின் செலவு செய்யப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதி வரைக்கும் உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இச் செயற்திட்டதிற்காக இணைக்கப்படடுள்ள பயனாளிகளில் 13 தொடக்கம் 34 வரையான பயனாளிகள் முழுமையான பயிற்சிப்பட்டறைகளில் ஈடுபட்டிருக்கவில்லை.

4.1.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

மீளாய்வாண்டின் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் கீழ் தரவன்கோட்டை கிராமத்தின் பிரதான வீதியிலிருந்து மன்னார் பனங்கட்டு கொட்டு மீன் சந்தை வரையிலான கால்வாயினை நிர்மாணிக்கும் வேலை 2025 செப்தெம்பர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2025 நவம்பர் 17 ஆந் திகதியளவில் பூர்த்தியாக்குவதற்கு மன்னார் பிரதேச செயலகத்தினால் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டிருந்த போதிலும் அக் குறிப்பிட்ட வேலை ஒப்பந்தகாரரினால் 45 நாட்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் 30 சதவீதமான வேலைகள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டு அதற்காக ரூபா 1,506,862 செலவிடப்பட்ட நிலையில் தொடர்சியான சீரற்ற காலநிலை காரணமாக அக்குறிப்பிட்ட வேலைகள் முடிவுறுத்தப்படாமல் இடை நடுவில் கைவிடப்பட்டு அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட எஞ்சிய தொகைகளும் திருப்பியனுப்பட்டிருந்தது. இதனால் இச் செயற்திட்டதிறாக செலவிடப்பட்ட தொகை முழுவதும் பயனற்ற செலவாக காணப்பட்டது.

4.1.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிதியேற்பாட்டின் கீழ் மடு பிரதேச செயலகத்தினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 15 ஆந் திகதியில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்ட சோதிநகர் உள்ளக வீதி புனரமைப்பு வேலைகள் 2026 மாரச் 26 வரைக்கும் பூர்த்தியாக்கப்படாமல் அக் குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதாக கருதி 2025 திசெம்பர் 30 ஆந் திகதியன்று ரூபா 1,348,492 பெறுமதிக்கு காசோலை ஒன்று வரையப்பட்டு பிரதேச செயலக கணக்கு கிளையில் தேக்கிவைக்கப்பட்டு மாற்றப்படாத காசோலையாக 2026 மார்ச் மாத வங்கிக்கணக்கிணக்க கூற்றுக்களில் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான முசலி பிரதேச சபையில் 05 வருடங்களிற்கு மேலாக பாவனையற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ள LE 6500 இலக்க தகட்டினைக் கொண்ட பாரவூர்தியினை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நாளதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள 10 மோட்டார் சைக்கிள்களும் 03 மின்பிறப்பாக்கிகளும் நீண்ட காலம் பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன் அவற்றை திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 முகாமைத்துவ பலவீனங்கள்

(அ) மீளாய்வாண்டின் இருப்பு கணக்கெடுப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் நானாட்டான், முசலி மற்றும் மடு பிரதேச செயலகங்களின் 126 வகையான 316 எண்ணிக்கையான பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் பதியப்படாது காணப்படுகின்றது.

(ஆ) மீளாய்வாண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை இனங்காணல், அபிவிருத்திப் பிரிவு, செயற்திட்டங்களை அங்கீகரித்தல், நிதியினை விடுவித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்தல் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 01/2025 ஆம் இலக்கமும் 2025 சனவரி 29 ஆந் திகதியும் கொண்ட நிதி அமைச்சின் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க மாவட்டச் செயலகத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

5. மனிதவள முகாமைத்துவம்

2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நான்கு நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 668 ஆக காணப்பட்டிருந்த போதும் உள்ளபடியான பதவியணியினர் 574 ஆக காணப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 94 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஒப்பமிடப்பட்டுள்ளது.

எம்.ஜி. மதரசிங்ஹ
பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

4. அத்தியாயம் 04- செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள்

குறிப்பீட்டு சுட்டிகள்	ஏதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	90%-100%	**75%-89%**	**50%-74%**
காணி அனுமதிப்பத்திரம் வழங்குதல்	-	76%	-
பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவுச் சான்றிதழ் வழங்குதல்	100%	-	-
வாகன வருமானவரி பத்திரம் வழங்குதல்	106%	-	-
தேசிய அடையாள அட்டைகள் வழங்குதல்	102%	-	-
வியாபார நிறுவனங்களை பதிவு செய்தலும் அதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதலும்	-	78%	-

5. அத்தியாயம் 05- பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை

5.1. அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

வறுமையை ஒழித்தல்

நாடு முழுவதும் வறுமை நிலை காணப்பட்டாலும், சில பிரதேசங்கள் தொடர்ந்து ஏனைய பகுதிகளை விட அதிக வறுமை நிலையை எதிர்கொண்டு வருகின்றன. இது ஆழமாக வேரூன்றியுள்ள கட்டமைப்பு சார்ந்த பிரச்சினைகளை சுட்டிக்காட்டுகிறது. அனைத்து வடிவங்களிலும் வறுமையை ஒழிப்பது மனிதகுலம் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால்களில் ஒன்றாகும். 1990 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கிடையில் தீவிர வறுமையில் வாழும் மக்களின் எண்ணிக்கை பாதிக்கு மேல் குறைக்கப்பட்டிருந்தாலும், இன்னும் பலர் தங்களது அடிப்படை மனிதத் தேவைகளுக்காக போராடி வருகின்றனர். 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்து வடிவங்களிலும் மற்றும் பரிமாணங்களிலும் வறுமையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், நாம் ஆரம்பித்த முயற்சிகளை முழுமையாக நிறைவு செய்வதற்கான துணிச்சலான உறுதிப்பாடே பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDGs) ஆகும். இதற்காக மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை இலக்காகக் கொண்டு, அடிப்படை வளங்களும் சேவைகளும் அதிகரிக்கப்படுவதோடு, மோதல்கள் மற்றும் காலநிலை தொடர்பான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும் ஆதரவு வழங்கப்பட வேண்டும்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
1 NO POVERTY	வறுமையை ஒழித்தல்	வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும்	“டிட்வா” சூறாவளியினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 24,000 பயனாளிகளுக்கு ரூ. 187,339,584.45 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் மற்றும் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன.	-	-	100%
			“டிட்வா” சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGOs) ஊடாக ரூ. 50,000,000 பெறுமதியான உணவுப் பொருட்கள் மற்றும் உணவல்லாத நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.	-	-	100%
			1,229 முதியோர் பயனாளிகளுக்கு ரூ. 71,766,000.00 பெறுமதியான முதியோர் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. மேலும், 1,816 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ. 212,110,000.00 பெறுமதியான மாற்றுத்திறனாளர் கொடுப்பனவுகளும், 285 சிறுநீரக நோயாளிகளுக்கு ரூ. 32,050,000.00 பெறுமதியான சிறுநீரக நோயாளர் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.	-	-	100%

			2025 ஆம் ஆண்டில் 22,653 தகுதியுடைய குடும்பங்கள் நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு ரூ. 82,294,367.73 பெறுமதியான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.	-	-	100%
			மாவட்டத்தில் ரூ. 615,650.00 பெறுமதியில் பிரஜாசக்தி செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.	-	-	100%
			நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சின் உதவியின் கீழ் ரூ. 72,746,253 பெறுமதியில் 51 வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. ISRC என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் (NGO) உதவியின் கீழ் ரூ. 125,000,000.00 பெறுமதியில் 125 வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.	-	-	100%

எல்லா வயதினருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கையையும் நல்வாழ்வையும் உறுதிப்படுத்துதல்

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
	ஆரோக்கியமும் நல்வாழ்வும்	தரமான அத்தியாவசிய சுகாதார சேவைகளுக்கான அணுகல் மற்றும் பாதுகாப்பான சுகாதார வசதிகளுக்கான அணுகலை உறுதிப்படுத்தல்	2,757 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ. 84,529,985.00 பெறுமதியான போசாக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. மேலும், 651 முன்பள்ளி மாணவர்களுக்கு ரூ. 10,167,830.00 பெறுமதியான காலை உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், 12 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 824,000.00 பெறுமதியான குரு அபிமானி நிதி உதவி வழங்கப்பட்டது.	-	-	100%
			நகர அபிவிருத்தி, நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சின் உதவியின் கீழ் 150 பயனாளிகளுக்கு ரூ. 5,769,231.00 பெறுமதியில் வீட்டு மின்சார இணைப்புகளும், 124 பயனாளிகளுக்கு ரூ. 3,763,524.00 பெறுமதியில் குடிநீர் இணைப்புகளும் வழங்கப்பட்டன.	-	-	100%

அனைவருக்கும் சமத்துவமான, தரமான கல்வியை உறுதிப்படுத்துவதுடன் வாழ்நாள் முழுவதும் கற்றல் வாய்ப்புகளை மேம்படுத்துதல்

அனைவருக்கும் உள்ளடக்கிய மற்றும் தரமான கல்வியை உறுதிப்படுத்துவது, கல்வி என்பது நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கான மிகவும் வலிமையானதும் நிரூபிக்கப்பட்டதுமான வழிமுறைகளில் ஒன்றாகும் என்ற நம்பிக்கையை மீள உறுதிப்படுத்துகின்றது. இந்நிலைபேறான அபிவிருத்தி இலக்கு, 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து சிறுவர்களும் சிறுமிகளும் இலவச ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், அனைவருக்கும் செலவுக் குறைந்த தொழிற்கல்வி மற்றும் பயிற்சிகளுக்கான சமமான அணுகலை வழங்குவதுடன், பாலின மற்றும் பொருளாதார வேறுபாடுகளை நீக்கி, தரமான உயர்கல்விக்கான பொதுவான அணுகலை உறுதிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
	அனைவருக்கும் சமமான கல்வி	அனைத்து மாணவர்களுக்கும் மலிவான மற்றும் தரமான கல்வி அடிப்படை வசதிகளுக்கு சமமான அணுகலை உறுதி செய்தல்.	கல்வி அமைச்சின் நிதியுதவியுடன் மன்னார் புனித வளனார் தேசியப் பாடசாலையில் ரூபா.54,000,000 மதிப்பில் ஒரு உள்ளக விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டது.	-	-	100%
			அரசு சார்பற்ற அமைப்புகள் (NGO) சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல், பெண்கள், குழந்தைகள் மற்றும் இளைஞர் வலுப்படுத்தும் திட்டங்களுக்கு துறைவாரியாக உதவிகளையும் அபிவிருத்தி வசதிகளையும் வழங்கியுள்ளன. இதன் மதிப்பு ரூபா.622,000,000 ஆகும்.	-	-	100%

அனைவருக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளின் கிடைப்பனவையும், அவற்றின் நிலையான முகாமைத்துவத்தையும் உறுதி செய்தல்

மேலும் மேலும் நாடுகள் நீர் பற்றாக்குறையை (நீரழுத்த நிலை) எதிர்கொண்டு வருகின்றன. அதிகரிக்கும் வறட்சி மற்றும் பாலைவனமயமாக்கல் இந்த நிலையை மேலும் மோசமாக்கி வருகிறது. 2030ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவான குடிநீரை வழங்குவதற்கு, போதுமான உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல், சுகாதார வசதிகளை வழங்குதல் மற்றும் சுகாதார பழக்கங்களை ஊக்குவித்தல் அவசியமாகும். நீருடன் தொடர்புடைய உயிரியல் சூழல்களை பாதுகாத்து மீட்டெடுப்பதும் மிக முக்கியமானதாகும்.

இலக்குஎண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%-100 %
	சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார வசதி	அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவான குடிநீருக்கு உலகளாவிய மற்றும் சமமான அணுகலை உறுதி செய்தல்.	நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் மூலம் 124 பயனாளர்களுக்கு நீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூபா. 3,763,524.00 ஆகும்.	-	-	100%
		அனைத்து துறைகளிலும் நீர் பயன்பாட்டு திறனை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து, நீர் பற்றாக்குறையை சமாளிக்க புதிய நீர்வளங்களை நிலைத்தன்மையுடன் பயன்படுத்தி எடுப்பதும் வழங்குவதும் உறுதி செய்தல். மேலும், நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்தல்.	அரச சார்பற்ற அமைப்புகள் (NGO) துறைவாரியான அபிவிருத்தி வசதிகளை வழங்கியுள்ளன. குறிப்பாக தொலைதூர பகுதிகளில் சுத்தமான குடிநீர் வசதிகளை வழங்குவதில் முக்கிய பங்களிப்பு செய்துள்ளன.	-	-	100%

மலிவான மற்றும் சுத்தமான எரிசக்தி

எரிசக்தி என்பது இன்றைய உலகம் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களுக்கும் வாய்ப்புகளுக்கும் மையமாக உள்ளது. வேலைவாய்ப்பு, பாதுகாப்பு, காலநிலை மாற்றம், உணவு உற்பத்தி அல்லது வருமான உயர்வு ஆகியவற்றிற்காகவும், அனைவருக்கும் எரிசக்தி கிடைப்பது மிகவும் அவசியமானதாகும். இந்த இலக்கை அடைவது, மற்ற நிலையான அபிவிருத்தி இலக்குகளோடு நேரடியாக தொடர்புடையதால் மிக முக்கியமானதாகும்.

அனைவருக்கும் எரிசக்தி கிடைப்பதை உறுதி செய்தல், எரிசக்தி திறனை அதிகரித்தல் மற்றும் புதிய பொருளாதார மற்றும் வேலை வாய்ப்புகளின் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டை அதிகரித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவது, நிலையான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்கவும், காலநிலை மாற்றம் போன்ற சுற்றுச்சூழல் சவால்களுக்கு எதிராக உறுதியான நிலையை உருவாக்கவும் முக்கியமானதாகும்.

மன்னார் மாவட்டத்தில் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரிக்கும் நிலையில், மலிவான எரிசக்தி தேவையும் அதிகரிக்கும். அதே நேரத்தில், படிம எரிபொருட்களை (fossil fuels) சார்ந்த பொருளாதாரம் காலநிலையில் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்துகிறது. எனவே சூரிய, காற்று மற்றும் வெப்ப ஆற்றல் போன்றவற்றில் முதலீடு செய்வது, எரிசக்தி உற்பத்தித் திறனை மேம்படுத்துவது மற்றும் அனைவருக்கும் எரிசக்தியை உறுதி செய்வது ஆகியவை 2030க்குள் SDG 7 இலக்கை அடைவதற்கு மிகவும் அவசியமானவை.

அனைத்து நாடுகளிலும் சுத்தமான மற்றும் திறமையான எரிசக்தியை வழங்குவதற்காக அடிப்படை கட்டமைப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் வளர்ச்சியை ஊக்குவித்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும்.

எனினும், இந்த சவால் இன்னும் முழுமையாக தீர்க்கப்படவில்லை. சுத்தமான எரிபொருள் மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகலை அதிகரிக்கவும், கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் தொழில்துறை போன்ற பயன்பாடுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஒருங்கிணைப்பதில் மேலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது. எரிசக்தி துறையில் அரசு மற்றும் தனியார் முதலீடுகள் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் உலகின் எரிசக்தி அமைப்புகளை மாற்றுவதற்கு ஒழுங்குமுறை கட்டமைப்புகள் மற்றும் புதுமையான வணிக மாதிரிகளில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%-100 %
	மலிவான மற்றும் சுத்தமான எரிசக்தி	எங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ய, மலிவு, நம்பகமான மற்றும் நவீன ஆற்றல் சேவைகளுக்கான அணுகலை உறுதி செய்ய 10 காற்றாலை (turbine) அமைத்தல்	மன்னார் மாவட்டத்தில் சுமார் 40,000 குடும்பங்கள் எந்தவித இடையூறும் இல்லாமல் மின்சாரத்தை பயன்படுத்தி வருகின்றன	-	-	100%

“அனைவருக்கும் நிலையான, அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியை, முழுமையான மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்பையும், கண்ணியமான வேலைவாய்ப்பையும் ஊக்குவித்தல்”

இணையக் காட்சி (interactive visualizations) மூலம், விவசாயப் பணிகளையும் உள்ளடக்கிய அனைத்து வகை வேலைகளிலும் மொத்த வேலைவாய்ப்பில் உள்ள முறைசாரா வேலைவாய்ப்பின் (informal employment) விகிதம், பாலின அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு காட்டப்படுகிறது.

உற்பத்தி சார்ந்த செயல்பாடுகள், கண்ணியமான வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில் முனைவோர் வளர்ச்சி, படைப்பாற்றல் மற்றும் புதுமையை ஆதரிக்கும் வளர்ச்சி நோக்கிய கொள்கைகளை ஊக்குவிக்க வேண்டும். மேலும், சிறு, நடுத்தர மற்றும் மிகச் சிறு நிறுவனங்களின் (MSMEs) உருவாக்கம் மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் அதற்காக நிதி சேவைகளுக்கு அணுகலை (access to financial services) மேம்படுத்த வேண்டும்.

நிலையான பொருளாதார வளர்ச்சி, உயர்ந்த உற்பத்தித் திறன் மற்றும் தொழில்நுட்ப புதுமைகளை SDGs ஊக்குவிக்கின்றன. தொழில் முனைவோர் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இதற்கு முக்கியமானவை. கட்டாய வேலை, அடிமைத்தனம் மற்றும் மனித கடத்தலை ஒழிப்பதற்கான பயனுள்ள நடவடிக்கைகளும் அவசியம்.

இந்த இலக்குகளை கருத்தில் கொண்டு, 2030 ஆம் ஆண்டுக்குள் அனைத்து பெண்களுக்கும் ஆண்களுக்கும் முழுமையான மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்பையும், கண்ணியமான வேலைவாய்ப்பையும் உறுதி செய்வதே இந்த இலக்கின் நோக்கம்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%-100%
	கண்ணியமான வேலை மற்றும் பொருளாதபர வளரச்சி	பனங்காய் (பனம்பழம்) கூழ் (pulp) செயலாக்கத்திற்காக பாரம்பரிய பனை உற்பத்தியாளர் குழுக்களை வலுப்படுத்தி, இளைஞர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து பெண்களுக்கும் ஆண்களுக்கும் முழுமையான மற்றும் பயனுள்ள வேலைவாய்ப்பையும் , கண்ணியமான வேலைவாய்ப்பையும் உறுதி செய்தல் மேலும் சம மதிப்புடைய பணிக்கு சம ஊதியம் வழங்குதல்	UNDP நிறுவனம் விவசாய வளர்ச்சிக்காக 25 நீர்ப்பம்புகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. இதன் மதிப்பு ரூ. 3,500,000.00 ஆகும். CHRYSALIS (தன்னார்வ நிறுவனம்) 25 குடும்பங்களுக்கு தலா ரூ. 500,000 வீதம் நிதி உதவி வழங்கியுள்ளது. மொத்த நிதி உதவி ரூ. 12,500,000.00 ஆகும். கிராம அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வளர்ச்சி அமைச்சகம் பனை உற்பத்தி திட்டங்களை (Palmyra Production Programmes) ஏற்பாடு செய்துள்ளது. இதன் மதிப்பு ரூ. 9,038,450.00 ஆகும்	-	-	100%

வலுவான உட்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்துறை வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் புதுமையை வளர்த்தல்"

பல வளர்ந்து வரும் நாடுகள் புதிய தொழில்நுட்பங்களுக்கு நிதி வழங்குவதில் பல சவால்களை எதிர்கொள்கின்றன. உட்கட்டமைப்பு (infrastructure) மற்றும் புதுமை (innovation) ஆகியவற்றில் முதலீடு செய்வது பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு மிக முக்கியமான இயக்க சக்திகளாகும்.

இப்போது உலக மக்கள் தொகையின் பாதிக்கும் மேற்பட்டோர் நகரங்களில் வாழ்கின்றனர். இதனால் பெருமளவு போக்குவரத்து வசதிகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (renewable energy) ஆகியவற்றின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. அதேபோல் புதிய தொழில்துறைகள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பங்களின் (ICT) வளர்ச்சியும் அவசியமாகியுள்ளது.

தொழில்நுட்ப முன்னேற்றம் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களுக்கு நீடித்த தீர்வுகளை கண்டறிய முக்கிய பங்கு வகிக்கிறது. இது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், ஆற்றல் திறனை (energy efficiency) மேம்படுத்தவும் உதவுகிறது.

நிலையான தொழில்துறைகளை ஊக்குவித்தல், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புதுமையில் முதலீடு செய்வது ஆகியவை நிலையான வளர்ச்சியை அடைய முக்கியமான வழிகளாகும்.

இலக்குஎண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100%
	நாட்டின் தொழில்துறையை வளர்த்து, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து, வலுவான அடிப்படை வசதிகளை உருவாக்குதல்	மக்களின் நலன் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்காக, அனைவருக்கும் மலிவாகவும் சமமாகவும் கிடைக்கும் வகையில் வலுவான மற்றும் நிலையான கட்டமைப்புகளை உருவாக்குதல்.	போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், விளையாட்டு மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு செய்து, மன்னார் மாவட்டத்தில் 14 முன்னுரிமை சாலைகளை (மொத்தம் 8.4 கி.மீ) புதுப்பித்துள்ளது. நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சகம் ரூ. 100 மில்லியன் ஒதுக்கீடு செய்து, மன்னார் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 சாலைகளை (மொத்தம் 3.96 கி.மீ) புதுப்பித்துள்ளது.	-	-	100%
		வளர்ந்து வரும் நாடுகளில் தொழில்நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சி மற்றும் புதுமையை ஊக்குவித்து, தொழில் வளர்ச்சிக்கும் பொருட்களுக்கு கூடுதல் மதிப்பு சேர்க்கும் நடவடிக்கைகளுக்கும் உதவுதல்	விளையாட்டு அமைச்சகம் தேவையான வசதிகளுடன் ஒரு நீச்சல் குளத்தை கட்டியுள்ளது. இதன் மதிப்பு ரூ. 69,210,000.00 ஆகும்.	-	-	100%
		உற்பத்தி செயல்பாடுகளை வளர்த்துக் கொண்டு, நமது நாட்டில் தயாரிக்கப்படும் தொழில்துறை மற்றும் உள்ளூர் பொருட்களின் பயன்பாட்டை அதிகரித்தல்	முருக்கன் அரச தானியக்களஞ்சியசாலையில் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ. 9,130,122.76 ஆகும்.	-	-	100%

நாடுகளுக்குள் மற்றும் நாடுகளுக்கு இடையிலான சமமின்மையை குறைத்தல்

இலங்கையில் பல்வேறு நிலைகளில் சமமின்மை (inequality) காணப்படுகிறது. வருமானம், பாலினம், வயது, மாற்றுத்திறன், பாலியல் விருப்பம், இனம், வர்க்கம், இனக்குழு, மதம் மற்றும் வாய்ப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமமின்மைகள் உலகம் முழுவதும் தொடர்ந்து காணப்படுகின்றன. சமமின்மை நீண்டகால சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியை அச்சுறுத்துகிறது வறுமை குறைப்பை பாதிக்கிறது மற்றும் மக்களின் நிறைவு உணர்வையும் தன்னம்பிக்கையையும் கெடுக்கிறது. இதனால் குற்றச்செயல்கள், நோய்கள் மற்றும் சுற்றுச்சூழல் சேதம் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

அனைவருக்கும் வளர்ச்சி வாய்ப்பு இல்லாமல் விட்டால், நிலையான வளர்ச்சியை அடையவும், உலகை அனைவருக்கும் சிறந்ததாக மாற்றவும் முடியாது. கடந்த சில தசாப்தங்களில் பெரும்பாலான இடங்களில் வருமான சமமின்மை அதிகரித்துள்ளது, ஆனால் அதன் வேகம் வெவ்வேறு நாடுகளில் வேறுபடுகிறது. இந்த வேறுபாடுகள் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அதிகாரமளிக்கும் கொள்கைகள் மற்றும் பாலினம், இனம் அல்லது இனக்குழு பாராமல் அனைவருக்கும் பொருளாதாரச் சேர்க்கையை (economic inclusion) ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை தேவைப்படுத்துகின்றன.

வருமான சமமின்மைக்கு உலகளாவிய தீர்வுகள் அவசியமாகின்றன. இதற்காக நிதி சந்தைகள் மற்றும் நிறுவனங்களின் ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்பை மேம்படுத்துதல், வளர்ச்சி உதவிகள் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) அதிக தேவை உள்ள பகுதிகளுக்கு ஊக்குவித்தல் முக்கியம். மேலும் மக்களின் பாதுகாப்பான குடியேற்றம் மற்றும் நகர்வு (migration and mobility) வசதிகளை ஏற்படுத்துதல், இந்த இடைவெளியை குறைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%- 100 %
10 REDUCED INEQUALITIES	சமமின்மையைக் குறைத்தல்	இனம், இனக்குழு, பிறப்பிடம், மதம் அல்லது பிற நிலைமைகள் எதுவாக இருந்தாலும் அனைவரின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சேர்க்கையை (சேர்த்துக்கொள்ளலை) வலுப்படுத்தி ஊக்குவித்தல்	கிராமப்புற அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 12.4 கி.மீ நீளமான சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதி இலங்கையில் உள்ள அனைத்து இனக்குழுக்களையும் எந்தவித பாகுபாடுமின்றி உள்ளடக்கியதாகும்	-	-	100%

		மத இடங்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு சமூக ஒற்றுமையை உருவாக்குதல்	2025 ஆம் ஆண்டில் நலன் நன்மை வாரியம் (Welfare Benefit Board) 22,653 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கியுள்ளது. இதன் மதிப்பு ரூ. 82,294,367.73 ஆகும்.” “நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சகத்தின் அளவுகோல்களுக்கு ஏற்ப, தேவையுள்ள 51 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ. 72,746,253.00 ஆகும்.	-	-	100%
			சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் WFP இணைந்து Adapt 4R (பேரிடர் தயார்நிலை) திட்டத்தை நடத்தியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பள்ளிகள், மத மற்றும் கலாச்சார மையங்கள், மத அமைப்புகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ. 4,609,145.91 ஆகும்	-	-	100%
		சமூக, பொருளாதார மற்றும் மத ரீதியான வளர்ச்சியை வலுப்படுத்தி, நல்ல சமூகத்தை உருவாக்க ஊக்குவித்தல்	Ditwah சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசர நிவாரண உதவிகள் (வீட்டு சுத்தம் செய்தல், வீட்டு பழுது பார்த்தல், வீட்டு உபயோகப் பொருட்கள், வீட்டு வாடகை உதவி, மாணவர்களுக்கு பள்ளி உபகரணங்கள்) வழங்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு ரூ. 395,121,529.40 ஆகும்.” “மடு திருத்தல யாத்திரிகர் விடுதி கட்டப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 27,380,896.77 ஆகும்	-	-	100%

நிலைபேறுள்ள நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு 11 ஆனது, நகரங்களையும் மனிதக் குடியிருப்புகளையும் உள்ளடக்கியதாகவும், பாதுகாப்பானதாகவும், இடர்தாங்கும் தன்மையுடையதாகவும், நிலைபேறானதாகவும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்விலக்கு, அனைவருக்கும் செலவுக் குறைந்த வீடமைப்பு வசதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகலை உறுதிப்படுத்துதல், ஒழுங்கற்ற குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்துதல், பாதுகாப்பான மற்றும் செலவுக் குறைந்த பொதுப் போக்குவரத்து வசதிகள் மற்றும் பசுமை வெளிகளுக்கான அணுகலை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது.

மேலும், நகர்ப்புற சூழலியல் பாதிப்புகளை குறைத்தல், காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தங்களுக்கான தயார்நிலையை மேம்படுத்துதல், கலாசார மற்றும் இயற்கை பாரம்பரியங்களைப் பாதுகாத்தல் என்பனவும் இவ்விலக்கின் முக்கிய நோக்கங்களாகும். நகரங்களின் விரைவான வளர்ச்சி, அதிகரித்து வரும் மக்கள் தொகை மற்றும் இடம்பெயர்வு காரணமாக ஏற்பட்டுள்ளதுடன், குறிப்பாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பெருநகரங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதற்காக பொதுப் போக்குவரத்தில் முதலீடு செய்தல், பசுமை பொதுவெளிகளை உருவாக்குதல் மற்றும் மக்கள் பங்கேற்பையும் உள்ளடக்கத்தன்மையையும் அடிப்படையாகக் கொண்ட நகர திட்டமிடல் மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் அவசியமாகும்.

இலக்கு எண்	இலக்கு / குறிக்கோள்	இலக்குகள்	சாதனை குறிகாட்டிகள்	இன்றுவரைசாதனைகளின் முன்னேற்றம்		
				0% - 49%	50% - 74%	75%-100%
11	நிலைபேறுள்ள நகரங்கள் மற்றும் சமுதாயங்கள்	அனைவருக்கும் போதுமான, பாதுகாப்பான மற்றும் செலவுக் குறைந்த வீடமைப்பு வசதிகளுக்கான அணுகலை உறுதிப்படுத்துதல்	வீடமைப்பு திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் மோதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ. 62.87 மில்லியன் பெறுமதியில் 42 வீடுகள் வழங்கப்பட்டன.	-	-	100%
		தேசிய மற்றும் பிராந்திய அபிவிருத்தித் திட்டமிடலை வலுப்படுத்துவதன் மூலம் நகர்ப்புற, புறநகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கிடையிலான நேர்மறையான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புகளை மேம்படுத்துதல்	வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ. 8.1 மில்லியன் பெறுமதியில் 09 வீடுகள் வழங்கப்பட்டன.	-	-	100%
			ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) நிதியுதவியின் கீழ், சுற்றாடல் அமைச்சினால் ரூ. 28.64 மில்லியன் பெறுமதியில் வங்காலை கடலரண் திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.	-	-	100%

5.2. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்.

1,229 முதியோர் பயனாளிகளுக்கு ரூ. 71,766,000.00 பெறுமதியான முதியோர் கொடுப்பனவுகளும், 1,816 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ. 212,110,000.00 பெறுமதியான மாற்றுத்திறனாளர் கொடுப்பனவுகளும், 285 சிறுநீரக நோயாளிகளுக்கு ரூ. 32,050,000.00 பெறுமதியான சிறுநீரக நோயாளர் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. மேலும், 2025 ஆம் ஆண்டில் 22,653 தகுதியுடைய குடும்பங்கள் நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு ரூ. 82,294,367.73 பெறுமதியான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் 2025 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் பயனாளிகளின் வறுமை நிலையை குறைப்பதற்கும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் சாதகமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

2,757 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூ. 84,529,985.00 பெறுமதியான போசாக்கு உணவுப் பொதிகளும், 651 முன்பள்ளி மாணவர்களுக்கு ரூ. 10,167,830.00 பெறுமதியான காலை உணவுகளும், 12 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 824,000.00 பெறுமதியான குரு அபிமானி நிதி உதவியும் வழங்கப்பட்டன. இத்திட்டங்களுக்காக மொத்தமாக ரூ. 95,521,815.00 செலவிடப்பட்டது. இத்திட்டங்களின் ஊடாக போசாக்குக் குறைபாட்டுடன் தொடர்புடைய முக்கிய சுகாதாரப் பிரச்சினைகளை குறைப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. மேலும், ஆயுட்கால எதிர்பார்ப்பை அதிகரிப்பதற்கும், குழந்தை மற்றும் தாய் இறப்பு விகிதங்களை குறைப்பதற்கும் இந்நடவடிக்கைகள் பங்களிப்பு வழங்கியுள்ளன. எதிர்கால பொதுச் சுகாதார சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்காக சுகாதாரப் பணியாளர்களின் திறன்கள், ஆற்றல்கள் மற்றும் தகைமைகளை மேம்படுத்தும் வகையில் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தடுப்பூசி வழங்கல், சுற்றாடல் மற்றும் தொழில்சார் சுகாதாரம், சுகாதார மேம்பாடு, தொற்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, அத்துடன் சாத்தியமான சுகாதார அவசரநிலைகள் தொடர்பான ஆதாரபூர்வமான தகவல்கள் மற்றும் ஆய்வு முடிவுகள் சுகாதாரத் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் நாட்டின் சுகாதாரக் கொள்கைகள், மருத்துவ மற்றும் பொதுச் சுகாதார நடைமுறைகள், மற்றும் ஆய்வக அறிவியல் துறைகளின் மேம்பாட்டிற்கு சாதகமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ரூ. 54,000,000.00 பெறுமதியில் உள்ளக விளையாட்டரங்கு (Indoor Stadium) நிர்மாணிக்கப்பட்டது. தரமான கல்வியை உறுதிப்படுத்தும் நோக்கில் பாடசாலை அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மாணவர்களுக்கு உகந்த கல்விச் சூழலை உருவாக்குவதற்காக பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஆதரவின் கீழ் அரச நிறுவனங்களினால் பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு, பொருத்தமான கல்விச் சூழல் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் தரமான கல்வியை மேம்படுத்துவதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்தி, கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சு, உள்நாட்டு இடம்பெயர்ந்தோர் (IDPs) மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு இலவச நீர்விநியோக இணைப்புகளை வழங்கியுள்ளது. மீள்குடியேற்றத்திற்குப் பிறகு, சம்பந்தப்பட்ட அமைச்சு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த அனைத்து திட்டங்களின் முக்கிய நோக்கம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதுடன், மக்களின் தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதாகும். குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் உள்ள 124 உள்நாட்டு இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. 3,763,524.00 மதிப்பிலான இலவச வீட்டுப் பயன்பாட்டு நீர்விநியோக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கை அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் மலிவான குடிநீரை சமமாகவும் நியாயமாகவும் கிடைக்கச் செய்வதற்கான இலக்கை அடைவதற்கு ஆதரவாக அமைந்துள்ளது.

இலங்கையில் காற்றாலை (Wind Power) மின்சார உற்பத்திக்கு குறிப்பிடத்தக்க திறன் உள்ளது. நிலத்தடி (Onshore) காற்றாலை மின் உற்பத்தி திறன் சுமார் 5,600 மெகாவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் இதுவரை சுமார் 267 மெகாவாட் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மன்னார் காற்றாலை மின் உற்பத்தி வலயம் மற்றும் கடற்கரைப் பகுதிகள் வலுவான காற்று வளங்களை கொண்டுள்ளன, முக்கிய இடங்களில் சராசரி காற்றின் வேகம் 8–9 மீ/வினாடி ஆக பதிவாகியுள்ளது. மேலும், கடலோர (Offshore) காற்றாலை மின் உற்பத்தி திறன் மிக அதிகமாக சுமார் 56 ஜிகாவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 27 ஜிகாவாட் நிலையான அடித்தள (fixed-bottom) அமைப்புகளுக்கு பொருத்தமானதாகவும், 29 ஜிகாவாட் மிதக்கும் காற்றாலை (floating wind) தொழில்நுட்பங்களுக்கு பொருத்தமானதாகவும் காணப்படுகிறது. எனவே, சூரிய, காற்றாலை மற்றும் வெப்ப மின் உற்பத்தி போன்ற புதுப்பிக்கத்தக்க மற்றும் பாரம்பரிய மின்சார வளங்களில் முதலீடு செய்வது மின்சார உற்பத்தித் திறனை மேம்படுத்துவதோடு, அனைவருக்கும் மின்சாரம் கிடைப்பதை உறுதி செய்ய உதவுகிறது.

சிறந்த வேலைவாய்ப்புகளுக்கான அணுகல், வருமான சமமின்மையைக் குறைப்பதற்கும், பாதிப்புகளைக் குறைப்பதற்கும், மனித கண்ணியத்தை மேம்படுத்துவதற்கும், மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை எளிதாக்குவதற்கும் மிக முக்கியமானதாகும். இது குறைந்தது பொருளாதார அதிர்வுகளின் தாக்கங்களை தணிக்கும் வகையில் ஊதியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பை வழங்க முடியும். இலங்கையில், குடும்ப வருமானத்தின் பாதிக்கு மேற்பட்ட பகுதி ஊதியங்கள் மற்றும் சம்பளங்களிலிருந்து பெறப்படுகிறது. நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) அதிக உற்பத்தித்திறன், தொழில்நுட்ப புதுமை மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன. இந்த இலக்குகளை கருத்தில் கொண்டு, 2030 ஆம் ஆண்டிற்குள் அனைத்து பெண்களுக்கும் ஆண்களுக்கும் முழுமையான மற்றும் உற்பத்தி திறன் வாய்ந்த வேலைவாய்ப்பு மற்றும் சிறந்த பணிநிலைகள் (Decent Work) வழங்கப்பட வேண்டும் என்பதே முக்கிய இலக்காகும்.

உட்கட்டமைப்பு வசதிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள், போக்குவரத்து, நீர்ப்பாசன வசதிகள், மின்சாரம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்றவை பல நாடுகளில் நிலையான வளர்ச்சியை அடையவும், சமூகங்களை வலுப்படுத்தவும் மிகவும் முக்கியமானவை. உற்பத்தித் திறன் மற்றும் வருமான வளர்ச்சி, அதேபோல் சுகாதார மற்றும் கல்வி முடிவுகளின் மேம்பாடு ஆகியவை அடிப்படை உட்கட்டமைப்பு முதலீடுகளின் மூலம் மட்டுமே சாத்தியமாகும் என்பது நீண்ட காலமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிறு அளவிலான தொழிற்துறைகள் மற்றும் பிற நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, கிராமப்புறங்களுக்கு நல்ல போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி சந்தை அணுகலை மேம்படுத்துவது அவசியமாகும். அதேபோல், பொதுப் பயன்பாட்டு கட்டிடங்களை அமைப்பதன் மூலம் சேவைகளை எளிதாக்கி, நிலைபேறான உட்கட்டமைப்பு அபிவிருத்தியை ஊக்குவிக்க முடியும். உட்கட்டமைப்பு அபிவிருத்தி பணிகள், விளையாட்டு மைதானங்களின் புதுப்பிப்பு, சமூக அபிவிருத்தி திட்டங்கள், கிராமிய வீதிகளின் மேம்பாடு மற்றும் பொதுக் கூடங்களின் கட்டுமானம் ஆகியவை தொழில் வளர்ச்சி, புதுமை மற்றும் அடிப்படை கட்டமைப்பு இலக்குகளை அடைவதற்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

எமது மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், வழிபாட்டு இடங்கள் மற்றும் சமூகத்தின் முக்கியமான இடங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் துறைகளால் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய திட்டங்கள் சமூக ஒருமைப்பாட்டையும் சமூக ஒற்றுமையையும் உருவாக்குவதற்கு உதவுகின்றன. இலங்கையின் அரசியலமைப்பு சமத்துவத்தை உறுதி செய்கிறது. மேலும், நாடு சர்வதேச உடன்படிக்கைகள் மூலம் அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கு உறுதிபூண்டுள்ளது. எனினும், பாலின அடிப்படையிலான பாகுபாடு கொண்ட சில சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் இன்னும் நடைமுறையில் இருந்து வருகின்றன. இவை பெண்கள், சிறுமிகள் மற்றும் எமது நாட்டின் முழு சமூகங்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் வாய்ப்புகளை பாதிக்கின்றன.

இலங்கையின் பெரும்பாலான நகர்ப்புறப் பகுதிகள் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றன. இவை ஒரு பகுதி அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் அதிக மக்கள் அடர்த்தியுடன் தொடர்புடையவையாகும். நிலையான வளர்ச்சி இலக்கு 11 தொடர்பான முன்னேற்றத்தின் சூழலில், இந்த அத்தியாயம் தற்போதைய நிலைமையையும், கீழ்கண்ட தலைப்புகள் தொடர்பான பரிந்துரைகளையும் விவாதிக்கிறது: உள்ளூர் பேரிடர் அபாயக் குறைப்பு உத்திகள் வலுப்படுத்தல் நகரங்கள் மற்றும் அவற்றின் நிர்வாகம் அனைவரையும் உள்ளடக்கிய நகர திட்டமிடல் நகர்ப்புறக் கொள்கைகளுக்கான நிதி ஏற்பாடுகள் மற்றும் இடம்பெயர்வு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான சூழ்நிலை. மேலும், சுற்றுலா அமைச்சின் நிதி ஆதரவுடன் மன்னார் கோட்டை புதுப்பிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது மன்னார் சுற்றுலா அபிவிருத்திக்கு முக்கிய ஆதரவாக அமைந்து, மாவட்டத்தின் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

6. அத்தியாயம் 06- மனித வள விபரம்

6.1. பதவியணி முகாமைத்துவம்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி	புதவி வெற்றிடம் / (அதிகப்படியான)
சிரேஷ்ட	35	28	07
மூனறம் நிலை	19	04	15
இரண்டாம் நிலை	545	508	37
ஆரம்ப நிலை	69	34	35
மொத்தம்	**668**	**574**	**94**

6.2. பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது

- 02 எண்ணிக்கையான தொழில்நுட்ப அலுவலர் பதவி மாவட்ட செயலகத்திற்கும் 05 எண்ணிக்கையான பதவி 05 பிரதேச செயலகங்களிற்குமாக தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கென 07 எண்ணிக்கையான பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும் 01 தொழில்நுட்ப அலுவலர் மாத்திரமே ஒப்பந்த அடிப்படையில் மாவட்டச் செயலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் மதிப்பீடு தயாரித்தல், வேலை மேற்பார்வையிடுதல், ஒப்பந்த நடைமுறைகள் மற்றும் பற்றுச்சீட்டு சரிபார்த்தல் போன்ற அனைத்து கடமைகளும் தொழிநுட்ப உதவியாளர்களின் உதவியுடன் பதில் கடமை புரியும் மாவட்ட பொறியியலாளரினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக ஒவ்வொரு அபிவிருத்தி நடவடிக்கைகளையும் குறித்த கால எல்லைக்குள் கண்காணிப்பதும் செயற்படுத்துவதும் மிகுந்த வேலைப்பழு மிக்கதாக காணப்படுகின்றது.

- சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் பதவிக்கென மாவட்ட செயலகத்திற்கும் பிரதேச செயலகங்களிற்குமாக 06 எண்ணிக்கையான பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த பதவிக்கென எவரும் இதுவரை இணைக்கப்படவில்லை. மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்துவதற்கும் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்பின் தேவைப்பாடு உள்ளது.

- மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களுக்கான அலுவலக பணியாளர் சேவைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 48 பதவிகளை அனுமதித்திருந்தது, ஆனால் 2024 ஆம் ஆண்டளவில் 23 பணியாளர்கள் மட்டுமே சேவையிலிருந்தனர். இந்த எண்ணிக்கை அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவானது. இதனால் இரண்டாம் நிலை அலுவலர்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன் மாவட்ட செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களிலும் வினைத்திறனான சேவையை வழங்குவதில் இந்த நிலைமை சவாலாக அமைந்திருந்தது

- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 145 எண்ணிக்கையான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் 86 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். பெறுமதிமிக்க பொது சேவையினை வழங்குவதற்கு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு உதவுவது அவசியமாகும்.

- மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு 213 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதித்துள்ளது. இதேவேளை 267 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இங்கே இணைக்கப்பட்டுள்ளனர். இடவசதிகள் மற்றும் தளபாடங்கள் பற்றாக்குறையால் அன்றாட பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

- மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 19 எண்ணிக்கையான சாரதிகள் பதவிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், தற்போது 11 சாரதிகள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, சாரதிகளுக்காக 08 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவ்வெற்றிடமானது அத்தியாவசியமான நிர்வாக மற்றும் களச் செயல்பாடுகளைத் தொடர்ச்சியாகவும் திறமையாகவும் செயல்படுத்துவதைப் பாதிக்கிறது.

6.3. மனித வள அபிவிருத்தி.

நிகழச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றப்பட்ட பதவியினர் எண்ணிக்கை	நிகழ்ச்சித் திட்டக் காலம்	மொத்த முதலீடு ரூபா.		நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு	வெளியீடு/ பெற்றுக்கொண்ட அறிவு
			உள் நாட்டு	வெளி நாட்டு	உள்நாட்டு/ வெளி நாட்டு	
தொழில்நுட்ப அலுவலர்களுக்கான அளவையியல் தொடர்பான பயிற்சிப் பாசறை	04	05 நாட்கள்	118,000.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
SYSCGAA 2.0 பயிற்சி நெறி – GPS மூலம் வரவுப்பதிவு செய்தல் தொடர்பானது	50	01 நாள்	19,410.00	-	உள் நாடு	SYSCGAA தொடர்பான விளக்கம் பெற்றுக் கொள்ளப்பட்டு GPS மூலம் வரவுப்பதிவுகள் செய்யப்படுகின்றன.
முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கான அலுவலக நடைமுறைகள் மற்றும் நிதி நடைமுறைகள் தொடர்பான பயிற்சி நெறி	30	02 நாட்கள்	48,777.00	-	உள் நாடு	அலுவலக நடைமுறைகள் மற்றும் நிதி நடைமுறைகள் தொடர்பான விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பயிற்சி வகுப்பு	74	03 மணித்தியாலங்கள்	28,960.00	-	உள் நாடு	தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
150 மணித்தியால இரண்டாம் மொழி சிங்கள பாடநெறிக்கான பயிற்சி வகுப்பு	60	150 மணித்தியாலங்கள்	150,000.00	-	உள் நாடு	சிங்கள மொழிசார் அறிவு மேம்படுத்தப்பட்டது
இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டம் இல. 9/2023 இன் 82 ஆம் பிரிவின் கீழ் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிவிப்பை சமர்ப்பிப்பது குறித்த பயிற்சி நிகழ்ச்சி	110	03 மணித்தியாலங்கள்	13,200.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான முதுகலைப் பட்டப்படிப்பு பூர்த்திசெய்யப்பட்டது.	02	01 வருடம்	330,000.00	-	உள் நாடு	பொதுத்துறையில் நிர்வாகத் திறன்களும் அறிவும் மேம்படுத்தப்பட்டது

உற்பத்தித் திறன் தொடர்பான பயிற்சி நெறி	60	01 நாள்	33,270.00	-	உள் நாடு	தரவளையங்களை கையாலுதல் மற்றும் தர முகாமைத்துவம் தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டது
வாய்மொழி ஆவணப்படுத்தல் தகவல் சேகரிப்பு பணிகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.	60	1/2 நாள்	11,400.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
கொள்ளல் நடைமுறைகள் தொடர்பான பயிற்சி வகுப்பு	40	02 நாட்கள்	96,181.14	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
SYSCGAA 2.0 அமைப்பில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் முன்பக்க அலுவலக (Front Office) முறைமையின் பயன்பாடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.	45	01 நாள்	39,420.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
தேசிய உற்பத்தித்திறன் விருது தொடர்பான அறிமுகம் மற்றும் விளக்கமளிக்கும் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.	100	02 நாட்கள்	102,800.00	-	உள் நாடு	உற்பத்தித்திறன் போட்டிகளில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையும் பங்கேற்பு விகிதமும் மேம்படுத்தப்பட்டன.
உற்பத்தித் திறன் தொடர்பான பயிற்சி நெறி	80	01 நாள்	82,350.00	-	உள் நாடு	உத்தியோகத்தர்களின் பணித்திறன்கள் மேம்படுத்தப்பட்டதன் விளைவாக உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட்டு, சேவை மற்றும் பணி வெளியீடுகளின் தரமும் அளவும் உயர்த்தப்பட்டன
ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் யோகா பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது	80	1 1/2 மணித்திய ாலங்கள்	10,000.00	-	உள் நாடு	மன மற்றும் உடல் ஆரோக்கியத்தின் நிலை மேம்படுத்தப்பட்டது
வீட்டில் நிகழும் இயற்கை மரணம் தொடர்பான நடைமுறைகள் குறித்து கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சி	102	01 நாள்	70,400.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் யோகா பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது	70	1 1/2 மணித்திய ாலங்கள்	70,000.00	-	உள் நாடு	மன மற்றும் உடல் ஆரோக்கியத்தின் நிலை மேம்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது	100	02 நாள்	149,917.00	-	உள் நாடு	செயற்கை நுண்ணறிவு தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டதுடன், தற்போது அலுவலகப் பணிகளில் அதனைப் பயன்படுத்துவதன் மூலம் பணிகளை விரைவாகவும் துல்லியமாகவும் நிறைவு செய்ய முடிகிறது
தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி வகுப்பு	50	01 நாள்	24,630.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
சிறந்த மற்றும் மகிழ்ச்சியான பணிச் சூழலை உருவாக்கும் நோக்கில் ஊக்குவிப்பு நிகழ்ச்சி	84	2 மணித்தியாலங்கள்	6,000.00	-	உள் நாடு	உத்தியோகத்தர்களின் ஈடுபாடு மற்றும் வேலைத் திருப்தி அதிகரிக்கப்பட்டது.
தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான பயிற்சி வகுப்பு	90	03 மணித்தியாலங்கள்	81,950.00	-	உள் நாடு	தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
உத்தியோகத்தர்களின் மனநலன் மற்றும் பணிசார் சவால்களை சமாளிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் ஆலோசனை செயலமர	90	03 மணித்தியாலங்கள்	30,452.00	-	உள் நாடு	நேர்மறை அணுகுமுறையுடன் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது படுத்தப்பட்டது
SYSCGAA 2.0 இல் வரவு பதினை செய்தல் தொடர்பான பயிற்சி	130	01 நாள்	37,335.00	-	உள் நாடு	துறைசார் அறிவு மேம்படுத்தப்பட்டதுடன், தற்போது SYSCGAA 2.0 முறைமையில் வருகைப் பதிவுகளை பெறும் திறன் பெற்றுள்ளனர்
கொள்ளல் நடைமுறைகள் தொடர்பான பயிற்சி	02	06 மாதங்கள்	16,000.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது
"மகிழ்ச்சியான குடும்பம்" தொடர்பான ஆலோசனை செயலமர்வு	110	01 நாள்	33,550.00	-	உள் நாடு	அலுவலர்களது உள ஆரோக்கியம் மேம்பட்டது
தேசிய உற்பத்திதிறன் கோட்பாடுகள் தொடர்பான பயிற்சி	100	01 நாள்	74,000.00	-	உள் நாடு	கோட்பாடுகளுக்கமைய அலுவலக பணிகள் மேற்கொள்ளும் அளவு அதிகரித்துள்ளது.
உற்பத்திதிறன் - கோவை பராமரிப்பு தொடர்பான பயிற்சி	76	06 மணித்தியாலங்கள்	38,450.00	-	உள் நாடு	கோவை பராமரிப்பு தொடர்பான நுட்பங்களும் முறைமைகளும் பகிரப்பட்டன.
உற்பத்திதிறன் தொடர்பான பயிற்சி	65	06 மணித்தியாலங்கள்	46,697.75	-	உள் நாடு	வினைத்திறனான அலுவலக செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

உற்பத்திதிறன் தொடர்பான பயிற்சி	70	06 மணித்திய ாலங்கள்	50,340.00	-	உள் நாடு	வினைத்திறனான அலுவலக செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.
Globel Information System தொடர்பான செயலமர்வு	66	06 மணித்திய ாலங்கள்	37,090.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது.
கிராம அலுவலர்களுக்கான பிரதேச வரைபடம் தொடர்பான பயிற்சி	31	07 மணித்திய ாலங்கள்	12,790.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது.
உற்பத்திதிறன் தொடர்பான பயிற்சி	75	06 மணித்திய ாலங்கள்	54,575.00	-	உள் நாடு	வினைத்திறனான அலுவலக செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.
முதியோர் பராமரிப்பு தொடர்பாக கள உத்தியோகத்தர்களுக் கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது	50	03 மணித்திய ாலங்கள்	11,625.00	-	உள் நாடு	முதியோர் பராமரிப்பு தொடர்பாக விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டது
செயற்கை நுண்ணறிவு தொடர்பான பயிற்சி	50	03 மணித்திய ாலங்கள்	21,280.00	-	உள் நாடு	செயற்கை நுண்ணறிவு தொடர்பான அறிவு மேம்படுத்தப்பட்டதுட ன், தற்போது அலுவலகப் பணிகளில் அதனைப் பயன்படுத்துவதன் மூலம் பணிகளை விரைவாகவும் துல்லியமாகவும் நிறைவு செய்ய முடிகிறது
கட்டுமானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வு	105	03 மணித்திய ாலங்கள்	18,000.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது.
அலுவலக நடைமுறைகள் தொடர்பான பயிற்சி	147	06 மணித்திய ாலங்கள்	32,330.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது.
நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சி	145	06 மணித்திய ாலங்கள்	31,850.00	-	உள் நாடு	விடய அறிவு மேம்படுத்தப்பட்டது.
கொள்ளல் நடைமுறைகள் தெடர்பான பயிற்சி	75	06 மணித்திய ாலங்கள்	24,270.00	-	உள் நாடு	துறைசார் அறிவு மேம்படுத்தப்பட்டதன் விளைவாக, கொள்வனவு மற்றும் கட்டுமானப் பணிகளில் ஏற்படும் பிழைகள் மற்றும் நடைமுறைச் சிரமங்கள் குறைக்கப்பட்டன
மொத்தம்			**2,057,299.89**			

7. அத்தியாயம் 07- இணக்கப்பாட்டு அறிக்கை

இல	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	**பின்வரும் நிதி அறிக்கைகள்/ கணக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது	-	-
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது	-	-
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் வர்த்தக முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது	-	-
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது	-	-
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	பொருத்தமற்றது	-	-
1.6	ஏனைய	பொருத்தமற்றது	-	-
2	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது	-	-
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் *(CIGAS)* தயார் செய்து பொது திறைசேர்க்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது	-	-
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.8	இருப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA- N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல். (நி.பி.135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன.	இணக்கமானது	-	-
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள தெரியப்படுத்தப்பட்டது.	இணக்கமானது	-	-
3.3	ஓவ்வொரு கொடுக்கள் வாங்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது	-	-
3.4	*2014.05.11* திகதிய அரச கணகடகு சுற்றறிக்கை இல. *171/2004* இன் படி அரச ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது	-	-

4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது	-	-
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் *(NBD)* உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
5	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது.	இணக்கமற்றது	தரவுகள் சேகரிப்பதில் தாமதம்	எதிரகாலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்ப்பதற்கு உரிய அலுவலர்களுக்கு கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	நி.பி 134(2) டி.எம்.ஏ/ 1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமற்றது	03 மாதங்களுக்குள் பதிலளிக்கப்படுகின்றது.	எதிரகாலத்தில் ஒரு மாதத்திற்குள் பதிலளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணக்கமானது	-	-
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	டிஎம்ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.	இணக்கமானது	-	-
8	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவம சுற்றறிக்கை இல.01/2017 சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.	இணக்கமானது	-	-
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் அத்தியாயத்தின்படி சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும். அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது	-	-
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கொடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது.	இணக்கமானது	-	-

9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேணடும்.	இணக்கமானது	-	-
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கமற்றது	02 வாகனங்கள் பழுதுபார்கும் பணிக்காக விடப்பட்டுள்ளது	ஏதிரகாலத்தில் வாகனம் திருத்தப்பட்ட பின்னர் பரிசோதனை மேற்கொள்ளப்படும்
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கமானது	-	-
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதியில வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்த்தல்.	பொருத்தமற்றது	-	-
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமற்றது	2017 இல் ரூ.1,371,155.87 பெறுமதியான காசோலைகள் இணங்காணப்படாத காசோலைகளாக கண்டுபிடிக்கப்பட்டன	உரிய அலுவலரிடமிருந்து ரூ.1,021,300 மீளப்பெறப்பட்டுள்ள துடன் மிகுதிப்பணம் ரூபா. 349,855.87 இவ்வாணடிற்குள் பெறப்பட்டு சீர்செய்யப்படும்.
11	**நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துதல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது	-	-
11.2	நி.பி. 94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது	-	-
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது	-	-
12.2	நிலுவையிலள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணக்கமானது	-	-
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்.	இணக்கமற்றது	பதவி வெறிதாக்கல் மற்றும் இடைநிறுத்தம்	பிணையாளரிடமிருந்து அறிவிடப்படுகின்றது
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்.	இணக்கமானது	-	-
13.2	பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.	இணக்கமானது	-	-

14	**முண்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல். அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்.	இணக்கமானது	-	-
14.3	நி.பி 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்.	இணக்கமானது	-	-
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்.	இணக்கமானது	-	-
15	**வருமான கணக்கு**			
15.1	விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.	இணக்கமானது	-	-
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.	இணக்கமானது	-	-
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்.	இணக்கமற்றது	அபிவிருத்தி அலுவலர்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணியிலும் அதிகமாக உள்ளனர்	முகாமைத்துவ சேவை அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக அபிவிருத்தி அலுவலர்களது அனுமதிக்கப்பட ஆளணி எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்.	இணக்கமானது	-	-
16.3	20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது	-	-
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்குதல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல்.	இணக்கமானது	-	-
17.2	அமைப்புக்கள் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துக்கள்/ குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல்.	இணக்கமானது	-	-
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரய்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணக்கமானது	-	-
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாகடகுதல் மற்றும் செயற்படுத்தல்	இணக்கமானது	-	-
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொருத்தவரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது	-	-

19	**மனித வள திட்டத்தினை தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது	-	-
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணிநேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது	-	-
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமானது	-	-
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கமானது	-	-
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புகள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது	-	-